# மகாத்மாகாந்தி பிறந்த மாநிலத்துக்கு எல்லேக்காந்தி திடீர் விஜயம்

Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★★

தினமும் உபயோகியுங்கள்!
அண்ணா பற்பொடி


சகல விதபல் வியாதிகளையும் நீக்கி பற்களுக்கு வெண்மையையும் பிரகாசத்தையும் கொடுக்கும்.
தயாரிப்பாளர்கள்: அண்ணா தொழிற்சாலை, கிணுவில்

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389
மலா 11
இதழ்: 247
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஐப்பசி 1 ஷஃபான் 5 வெள்ளிக்கிழமை [17-10-69]

தீபாவளி ஜவுளிகள்
உங்களுக்கும் - உங்கள் குழந்தைகளுக்கும் தேவையான
ஜவுளி வகைகளும்
றெடிமேட் உடுப்புகளும்
மலிவான விலைகளில் பெறுவதற்கு
நம்பிக்கை வாய்ந்த ஸ்தாபனம்
ரமணி றெக்ஸ்ரைல்ஸ்
166, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.

புதுடில்லி அக், 16

காந்தி நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்காகப் பாரதம் வந்து புதுடில்லியில் தங்கியிருந்து எல்லைக் காந்தி கான் அப்துல் கபார்கான் இன்று காலை புதுடில்லியிலிருந்து காந்தி பிறந்த மாநிலமான குஜராத் வந்து சேர்ந்தார்

ஒருவித முன்னறிவித்தலுமின்றி ஆமதாபாத் புறப்பட்ட கான் அப்துல் கபார் கானைப் புதுடில்லி விமான நிலையத்தில் வழியனுப்பி வைக்க காங்கிரஸ் தலைவர்களும் மற்றும் ஆட்சிமன்ற அங்கத்தவர்கள் பலரும் ஏராளமான பொதுமக்களும் திரண்டிருந்தனர். அவர்கள் மத்தியில் பிரியாவிடை பெற்ற கான் அப்துல் கபார்கான் இங்கு எனது பழைய சகாக்களைக் கண்டு அவர்களோடு தங்கும்வாய்ப்புக் கிடைத்தமைக்கு மகிழ்ச்சியடைகிறேன். மகாத்மா பிறந்த இடத்திலேயே அவரது போதனைகள் அந்நாட்டு மக்களால் மறக்கப்பட்டு மறைந்துவிட்டன. அவைகளை அம் மக்களுக்கு ஞாபகப்படுத்தவே அங்குசெல்கிறேன் இதுவே எனது அகமதாபாத்விஜயத்தின் முக்கிய நோக்கம்என்த் குறிப்பிட்டார்.

அகமதாபாத் விமானநிலையத்தில் சென்று இறங்கிய கான் அப்துல் கபார்கானை குஜராத் கவர்னர் முதன் மந்திரி ஹிதேந்திரதேசாய் மொரார்ஜி தேசாய் மற்றும் அரசியல் தலைவர்கள் ஆகியோர்மலர்மாலை சூட்டி வரவேற்றனர்.

காந்தியின்சொந்த மாநில மக்கள் இங்கு அவரின்கருத்துக்களை மறந்து வன்முறைகளில் இறங்கியுள்ளனர், அவருக்கு மகாத்மாவின் உபதேசங்களை எடுத்துக் கூறுவது அவசியமெனக் கான் அப்துல்கபார்கான் விமான நிலையத்தில் தன்னை வரவேற்றவர்களுக்கு கூறினார்.

கபார்கான்தனது அகமதாபாத் விஜயத்தை முடித்துக் கொண்டு சர்வோதயசம்மேளனத்தில் பங்குபற்ற பீகாருக்கு செல்வாரெனவும் பூதான இயக்கத் தலைவர் விநோபாஜியை அவர்சந்தித்துப்பேசுவாரெனவும் தெரிகிறது. சமீபத்தில் ஆமதாபாத்தில் இரு பிரிவினருக்கிடையில்பெரும் கலகம் மூண்டு பலஉயிர் பலியானது குறிப்பிடத்தக்கது.

# பருத்தித்துறை கொலை; கொள்ளை:

# மேலும் மூவர் கைது

## சில பொருள்களும் பணமும் மீட்பு

### 10 மாதங்களின்பின் துலங்கிய மர்மம்

நல்லூர், வெள்ளி

சுமார் பத்துமாதங்களுக்குமுன் பருத்தித்துறையில் மொகிதீன் என்ற நகைவியாபாரி கொலை செய்யப்பட்டு அவரது கடை கொள்ளையடிக்கப்பட்டதுசம்பந்தமாகத்துப்புத்துலக்கிய இரகசியப் பொலிஸ் கோஷ்டியினர் கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களில் சிலவற்றையும் ரொக்கப்பணத்தையும் மீட்டுள்ளனர்.

இக்கொலையும் கொள்ளையும் சம்பந்தமா சந்தேகத்தின் மீது சில தினங்களுக்கு முன் இரகசியப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட ஒருவர் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்ட செய்தி 'ஈழநாடு' வாசகர்கள் அறிந்ததே. இது சம்பந்தமாக மேலும் மூவர்நேற்று முன்தினம் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். இந்த மூவரில் ஒருவர் யாழ்ப்பாணத்திலும் இருவர் கரவெட்டியிலும் கைது செய்யப்பட்டனர். இவர்களைக்கைது செய்த இரகசியப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் திரு குமார் மூவரையும் கொழும்புக்கு அனுப்பி வைத்தார்.

கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களில் சில மீட்கப்பட்டுள்ளதாகவும் கொள்ளையடிக்கப்பட்ட சில பொருள்களை விற்று அதன் மூலம் சந்தேகநபர் ஒருவர் மோட்டார் சைக்கிள் ஒன்றைவாங்கியதாகவும் அந்த மோட்டார் சைக்கிளை சமீபத்தில் தான் அவர் வேறொருவருக்கு விற்றுவிட்டு 1500 ரூபாய்ரொக்கமாக வைத்திருந்ததாகவும் அதனையும் பொலிசார் கைப்பற்றியுள்ளதாகவும் பொலிஸ் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

### ஜப்பானிய நிபுணர் குழு யாழ். வரும்

யாழ்ப்பாணம், வெள்ளி

ஜப்பானிய விவசாய நிபுணர் குழு ஒன்று இம்மாதம் 18-ந் திகதி யாழ்ப்பாணம் வருகிறது.

இவர்கள் இங்கு தற்போது விற்பனையாகி வரும் ''இரண்டு சக்கரம்'' பொருத்தப்பட்ட டிராக்டரை விவசாயிகள் எவ்விதம் பாவிக்கவேண்டும் என்பதை வடமாகாண விவசாயிகளுக்கு எடுத்துக் காட்டுவார்கள்.

நிபுணர் குழு வடமாகாணத்தில் மூன்று வார காலம் தங்கியிருக்கும்.

கடந்த மூன்று மாதங்களில் ''இரண்டு சக்கரம்'' பொருத்தப்பட்ட 15 டிராக்டர்கள் வடமாகாணத்தில் விற்பனையாகியுள்ளதாம்.

(தே. நி.)

......

# தேசீயசுவீப்முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்றுமாலை அகலவத்தையில் இழுக்கப்பட்ட 268வது தேசிய சுவீப் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:-

1-வது பரிசு
25 U 0809 -ரூ 100,000

2-வது பரிசு
39 S 0197 ரூ. 40,000

3-வது பரிசு
05 E 0735 ரூ 10,000

தலா 628 ரூபா பரிசுபெறும் 100 டிக்கட்டுகள்வருமாறு:-

| | |
|---|---|
| 23 C 0094 | 32 L 0295 |
| 30 F 0650 | 38 X 0028 |
| 29 T 0051 | 41 K 0870 |
| 02 E 0672 | 24 T 0818 |
| 35 E 0109 | 19 H 0829 |
| 09 J 0614 | 34 M 0244 |
| 21 X 0317 | 08 D 0826 |
| 15 M 0109 | 14 T 0518 |
| 20 O 0613 | 01 X 0013 |
| 11 K 0971 | 01 S 0206 |
| 21 R 0262 | 02 T 0226 |
| 17 D 0479 | 08 H 0505 |
| 20 D 0309 | 05 R 0611 |
| 31 S 0746 | 23 T 0804 |
| 43 F 0459 | 30 R 0727 |
| 19 E 0389 | 18 P 0400 |
| 24 Q 0264 | 41 K 0275 |
| 04 P 0717 | 43 M 0479 |
| 17 P 0858 | 16 U 0614 |
| 10 N 0058 | 16 Q 0127 |

| | |
|---|---|
| 10 N 0267 | 06 D 0095 |
| 29 B 0350 | 14 Q 0941 |
| 13 N 0278 | 01 M 0169 |
| 01 K 0118 | 13 T 0395 |
| 27 B 0577 | 44 P 0762 |
| 26 P 0302 | 18 Y 0777 |
| 09 T 0645 | 36 D 0090 |
| 10 P 0189 | 10 W 0776 |
| 36 K 0626 | 42 [illegible] 0148 |
| 23 G 0459 | 23 L 0064 |
| 25 W 0398 | 31 U 0984 |
| 24 Z 0197 | 22 A 0823 |
| 41 D 0075 | 42 Q 0562 |
| 13 H 0419 | 10 M 0223 |
| 11 B 0826 | 02 U 0027 |
| 37 o 0267 | 40 G 0436 |
| 23 H 0506 | 30 Y 0294 |
| 26 L 0950 | 12 X 0106 |
| 28 o 0045 | 43 J 0063 |
| 24 P 0768 | 23 P 0423 |
| 06 U 0271 | 42 B 0596 |
| 14 W 0736 | 34 J 0344 |
| 05 S 0076 | 14 F 0851 |
| 41 C 0821 | 27 Q 0159 |
| 43 E 0468 | 28 W 0693 |
| 41 B 0361 | 35 V 0895 |
| 02 U 0388 | 05 X 0776 |
| 29 Q 0217 | 25 M 0193 |
| 22 S 0623 | 09 U 0380 |
| 41 N 0946 | 18 D 0759 |

இவை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

# 6 பிள்ளைகளின் தாயை கொன்றவருக்கு தூக்கு

காலி வியா.

ஆறுபிள்ளைகளின் தாயை கத்தியால் குத்திக் கொன்ற குற்றத்திற்காக கே. ஏ. தர்மஸ்ரீ அல்லது டானி என்பவருக்கு காலி அசைஸ் நீதிமன்ற நீதியரசர் திரு சி. ஜி. வீரமந்திரி மரண தண்டனை விதித்தார்.

மச்சுவாடு என்ற இடத்தைச் சேர்ந்த நெசவாசிரியையான திருமதி குணவதி பெரேரா என்ற இந்தப் பெண்ணை சென்ற வருடம் ஏப்ரல் மாதம் 16-ம் திகதி கத்தியால் குத்திக் கொன்றதாக தர்மஸ்ரீ மீது தொடரப்பட்டிருந்த வழக்கு விசாரணை மூன்று நாள் தொடர்ந்து காலி அசைஸ் நீதிமன்றத்தில் நடைபெற்றபின் ஜூரிமார்களின் ஏகமனதான தீர்ப்பைத் தொடர்ந்து நீதியரசர் எதிரிக்கு மரணதண்டனை விதித்தார்.

# 'மாணவர் உணர்ச்சிகளை நல்வழிப்படுத்த வேண்டும்'

சுழிபுரம், வியாழன்

''மாணவர்கள் மத்தியில் இப்போது ஒரே குழப்பம் ஏற்பட்டுள்ளது. தமது எதிர்காலம் எப்படிஅமையவேண்டும். தாம் இங்கிருந்து எங்கு செல்கின்றோம் என்பதை சிந்தித்தவாறே காலத்தைஓட்டுகின்றனர். மாணவர்கள்உள்ளங்களில் பொங்கும் உணர்ச்சிகளை நல்வழிப்படுத்தவும் அவர்கள் வாழ்வு நல்வாழ்வாக அமையவும் பெற்றோர் ஆசிரியர்கள் தம்பணியை சிறப்புடன் ஆற்றவேண்டும். மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் ... மதி ஆர். எஸ் பாமர் குறிப்பிட்டார்.

விழாவுக்குகல்லூரி அதிபர் திரு. என். சிவஞானம் தலைமைவகித்தார்.

திருமதி பாமர் மேலும் பேசுகையில், 'மாணவர்கள் வெறும் ஏட்டுப்படிப்புடன் நின்றுவிடாது, நாட்டுக்கேற்றகல்வியைக்கற்கவேண்டும். மாணவஉள்ளங்களிலே பற்பல எண்ணங்கள் அவ்வப்போது தோன்றும் அவற்றை எல்லாம் ஒருமுறைப்படுத்தி பயன்காணவேண்டும் ஆசிரியர்கள் ...

தொலைபேசி உள்ளூர் அழைப்பு:

# ''மாநகர உறுப்பினர்களுக்கு

அரியாலை நோய்

கடந்த ஐந்து மாதங்களுக்கு மேலாக கூப்பனுக்கு பச்சை

வடபகுதியில்

# நான்கு விசேஷபொலிஸ் தகவல்சேகரிப்பு நிலையங்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யும் சம்பந்தமா சந்தேகத்தின் மீது சில தினங்களுக்கு முன் இரகசியப் பொலிசா திரு குமார் மூவரையும் கொழும்புக்கு அனுப்பி வைத்தார்.

பொலிஸ் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

விற்பனையாகியுள்ளதாம். (தே. நி.)

| | |
|---|---|
| 04 P 0717 | 43 M 0479 |
| 17 P 0858 | 16 U 0614 |
| 10 N 0058 | 16 Q 0127 |

இவைஉறுதிப்படுத்தப்பட வேண்டும்.

தித்தவாறே காலத்தைஒட்டுகின்றனர். மாணவர்கள்உள்ளங்களில் பொங்கும் உணர்ச்சிகளை நல்வழிப்படுத்தவும் அவர்கள் வாழ்வு நல்வாழ்வாக அமையவும் பெற்றூர் ஆசிரியர்கள் தம்பணியை சிறப்புடன் ஆற்றவேண்டும். மாணவர்கள், பெற்றூர்கள், ஆசிரியர்கள், அதிகாரிகள், யாவரும் ஒருவரை ஒருவர் நன்ருகப் புரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் ஒவ்வொருவரும் பயன்பெறலாம்''

இவ்வாறு பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி பெற்றூர் ஆசிரியர் சங்க நான்காவது ஆண்டு நிறைவுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றிய வடபகுதி பிரதம கல்வி அதிகாரி திரு

பேச்சுகையில், மாணவர்கள் வெறும் ஏட்டுப்படிப்புடன் நின்றுவிடாது, நாட்டுக்கேற்றகல்வியைக்கற்கவேண்டும். மாணவஉள்ளங்களிலே பற்பல எண்ணங்கள் அவ்வப்போது தோன்றும் அவற்றை எல்லாம் ஒருமுறைப்படுத்தி பயன்காணவேண்டும் ஆசிரியர்கள் ஓர் தூண்டுகோலாகவும், பெற்ருர்கள் பாதுகாவலராகவும் இருக்கவேண்டும். மாணவசக்தி பல தீய வேலைகளைச் செய்வதையும் நாம் கண்முன்னே காண்கின்ருேம். இவற்றை முறியடிக்கவேண்டும்' எனக் கேட்டுக்கொண்டார்.

கல்லூரி மாணவ மாணவிகளின்கதம்பவிழாவும் நடைபெற்றது.

தொலைபேசி உள்ளூர் அழைப்பு:

# "மாநகர உறுப்பினர்களுக்கு கட்டணம் விலக்க வேண்டும்"

## யாழ். மாநகரசபையில் நிறைவேறிய தீர்மானங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி ''கள்ளக்குடியேற்றத்தை தடுப்பதற்கான இராணுவத்தினருக்கு றெக்கிளமேசனில் துறைமுகத்திற்கு முன்ஞல் காணித்துண்டொன்று ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கையை இச்சபை வன்மையாக எதிர்ப்பதோடு, வேறு இடத்தில் இதற்குப்பதிலாக அவர்களுக்குக் காணித்துண்டு ஒதுக்கி கொடுக்குமாறு அரசாங்க அதிபரை இச்சபை கேட்டுக்கொள்கிறது.''

யாழ்ப்பாணம் மாநகரசபைக் கூட்டத்தில் டாக்டர் . எல். ஏபிரகாம் கொண்டு வந்தமேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

மேயர் திரு. எஸ். நாகராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மேற்கண்டதீர்மானம் பற்றி திரு. என்.ரி. செல்லத்துரை பேசும்போது கூறியதாவது: வடபகுதியில் ஏற்கனவே இராணுவம், முகாமிட்டிருக்கும் இடங்களில், அடிக்கடி பொதுமக்கள் துன்புறுத்தப்படுகிருர்கள். யாழ்ப்பாணத்திலும், இராணுவத்திற்கு இடமளித்தால் இங்குள்ள மக்கள் கஷ்டப்படுவார்கள். ஆதலால் இராணுவத்திற்கு இங்கு இடமளிக்கக் கூடாது.

மேயர் திரு. நாகராசா பேசுகையில் ''அரசாங்கக் காணியில்தான் இராணுவத்திற்கு இடமளிக்கப்படுகிறது அது மாநகரசபைக் காணி அல்ல சம்பிரதாயத்திற்காகத்தான் இச்சபைக்குத்தெரிவித்திருக்கிருர்கள்'' என்ருர்.

திரு. கே. வி. தெய்வேந்திரன்: அப்படியாஞல் நாங்களும் சம்பிரதாயத்திற்காக எதிர்ப்புத் தெரிவிப்போம்.

திரு. ஏ.ஜி. ராஜசூரியர்: இச்சபைஇதற்கெனத்தீர்மானம் நிறைவேற்றுவதிலும் பார்க்க, இப்பிரேரணையைக் கொண்டுவந்தவர், யாழ்ப்பாண எம்.பி.மூலம் இதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

இத்திர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

டாக்டர் ஏ எல் ஏபிரகாம் கொண்டுவந்த கீழ்க்காணும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. யாழ்ப்பாணம் சென். ஜேம்ஸ் பெண்பாடசாலையை அடுத்த 1970-ம் ஆண்டு தொடக்கம் 7-ம் வகுப்புவரைக்கும் கற்பிக்கும் பாடசாலையாகத் தரம் குறைப்பதற்கு கல்விப்பகுதியினர் திட்டமிட்டுள்ளனர். கல்வியில்பின் தங்கிய சூழலில் இருக்கும் இப்பாடசாலையை இன்றைவரைக்கும் இருப்பதுபோல், 10-ம் வகுப்பு வரையும் தொடர்ந்து நடத்துவதற்கு அனுமதி வழங்குவதும் அல்லாமல், வெகு சீக்கிரத்தில் ஒரு மகாவித்தியாலயமாக ஆக்கி வைக்கும்படி சம்பந்தப்பட்டவர்களை கேட்டுக்கொள்வதென சபை தீர்மானிக்கிறது.

மாநகரப்பகுதிக்குட்பட்ட டெலிபோன் உள்ளூர் அழைப்பு ஒன்றுக்கு 15 சதம் கட்டணம் விதிக்கப்படுவது காரணமாகவும், வரியிறுப்பாளர்களது, பிரதிநிதிகள் என்ற வகையில் மாநகர அங்கத்தவர்கள் ஊதியம் அல்லது படிகள் எதுவுமில்லாது தமது கடமைகளை மேற்கொண்டு வருவதாலும் உள்ளூர் அழைப்பு ஒன்றுக்கு 15சதம்கட்டணம் விதிப்பதிலிருந்து மாநகர அங்கத்தவர்களுக்கு விலக்கு அளிக்கும்படி சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு யோசனை தெரிவிக்கும்படி இச்சபை உள்ளூராட்சி அமைச்சரை கேட்டுக்கொள்வதென இச்சபைதீர்மானிக்கிறது. என டாக்டர் ஏ எல் ஏபிரகாமிஞல் கொண்டுவரப்பட்ட தீர்மானமும் சபையி நிறைவேறியது.

''குருநகர்றெக்கிளமேச வீடமைப்புப் பகுதியில் வீடுகள் இன்று வெறுமனே காணப்படும் யாழ். மாநகர சபை நிலங்களைப் பொதுமக்கள் சுகாதார வசதிக்கமைவாக வீடுகள் கட்டுவதற்காக, பகிர்ந்து கொடுக்கும்படி இச்சபை தீர்மானிக்கிறது'' என அவர்கொண்டு வந்தமற்ருெரு தீர்மானத்தைசுகாதாரக்கமிட்டியின் முடிவுக்கு கொண்டுவருவதெனசபை தீர்மானித்தது.

# "தரமற்ற விதைகிழங்கைப் பாவிக்காதீர்"

## வடபகுதி விவசாய அதிகாரி கூறுகிருர்

யாழ்ப்பாணம், வெள்ளி 'வடமாகாணத்தில் தற்போது கள்ளச் சந்தையில் விற்பனையாகும் விதை உருளைக் கிழங்குகளை வடபகுதி விவசாயிகள் பாவித்தால் வருங்காலத்தில் வடபகுதியில் உருளைக்கிழங்கு உற்பத்தி அடியோடு அழிந்துவிடும்' என்று வடபகுதிவிவசாய அதிகாரிதிரு மாணிக்கவாசகர் வடபகுதி விவசாயிகளை எச்சரிக்கை செய்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:

'பிற நாடுகளிலிருந்து அரசாங்கம் மிக விரைவில் தரமுள்ள விதை உருளைக் கிழங்குகளை இறக்குமதி செய்யவிருப்பதாகவும் அதுவரை விவசாயிகள் பொறுமையாக இருக்கவேண்டுமென்றும் தரம் குறைந்த விதை உருளை கிழங்குகளைப் பாவித்து உருளைக்கிழங்கு உற்பத்தியை அழிக்க வேண்டாம் என்றும் அவர்சொன்ஞர். (தே. நி)

## 1500 பேருக்கு வேலைவாய்ப்பு

கோட்டை, வியாழன் இந்த நிதிவருட முடிவுக்குள் சுகாதார அமைச்சு 1500 பேருக்கு வேலைவாய்ப்பளிக்கத் திட்டமிட்டுள்ளது இதற்கு திறைசேரியும் அங்கீகாரம் வழங்கியுள்ளது

விசேஷ வைத்தியர்கள், தாதிகள், மருத்துவ மாதுகள், மருந்துகலப்பவர்கள், எக்ஸ்றே படப்பிடிப்பாளர்கள் முதலியோரின் தேவை அதிகரித்துவருவதால் இத்தேவையைப் பூர்த்திசெய்யவே மேற்படி நடவடிக்கையை சுகாதாரப்பகுதி மேற்கொள்ளவிருக்கிறது.

## அரிசியால் நோய்

அல்லைப்பிட்டி, வியாழன் 'தீவுப்பகுதி மக்களுக்கு கடந்த ஐந்து மாதங்களுக்கு மேலாக கூப்பனுக்கு பச்சை அரிசியே வழங்கப்பட்டு வருகின்றது இதனை உண்ணும் இரண்டு,மூன்று வயதுக் குழந்தைகள் வயிற்றுளைவு நோய்காரணமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். உவர் நீரைப் பருகும் இப்பகுதி மக்களுக்கு பச்சை அரிசி ஒத்துவராமல் இருப்பதஞல் இப்பகுக்கு உடனடியாக உள்ளூர் அரிசியை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கும்படிகேட்டுக்கொள்கிருேம்'. இவ்வாறு தெரிவிக்கும் கோரிக்கையைத் தீவுப்பகுதி வாலிபமுன்னணியினர் அரசாங்க அதிபரிடம்சமர்ப்பித்துள்ளனர்.

## இருவரால் தாக்கப்பட்டாராம்

யாழ்ப்பாணம், வெள்ளி கோப்பாய் வடக்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சிமியோன் என்பவர் பலத்த காயங்களுடன் அபாயகரமானநிலையில் நேற்று யாழ்ப்பாணம்பெரியாஸ்பத்திரியில் அனுமதிககப்பட்டார் இது சம்பந்தமாக ஜோன் செல்வரத்தினம் என்பவரை சந்தேகத்தின் பேரில் கோப்பாய் பொலிசார் கைது செய்துள்ளனர்.

காயமடைந்தவர் இருபாலை நோக்கி சென்றுகொண்டிருந்தபோது முருகன் சாமிநாதன் ஜோன் செல்வரத்தினம் ஆகியோர் அவரைத் தாக்கியதாக கூறப்படுகிறது. இச் சம்பவம் கோப்பாயில் நேற்று நடந்தது,

பதில் மாஜிஸ்திரேட் திரு எஸ். கனகரத்தினம் நேற்று காயமடைந்த வேலுப்பிள்ளை சிமியோனின் வாய் முறைப்பாட்டை பதிவு செய்தார்

மற்ருெருசந்தேகநபரான முருகன் சுவாமிநாதனை பொலிசார் தேடிவருகின்றனர்.

வடபகுதியில்

# நான்கு விசேஷபொலிஸ் தகவல்சேகரிப்பு நிலையங்கள்

யாழ்ப்பாணம்,வெள்ளி வடபகுதியில் நான்கு பொலிஸ் நிலையங்களில் விசேஷ தகவல் சேகரிப்புப் பகுதிகள் விரைவில் நிறுவப்படவிருக்கின்றன.

இன்று யாழ்ப்பாணம் வரும் இரகசியப்பொலிஸ் பகுதி சுப்பிரின்டன் திரு. செனிவிரத்தஞ இதற்கான இடங்களைத்தெரிவு செய்து அதற்கான முழு நடவடிக்கைகளிலும் ஈடுபடுவார்.

வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், காங்கேசன் துறைஆகியநான்குபொலிஸ் நிலையங்களிலும் இத்தகவல் சேகரிப்பு பொலிஸ்பகுதிகள் நிறுவப்படும்.

அரசியல் வாதிகள், வெளிநாட்டுப்பிரமுகர்கள், பலரதும் சொற்பொழிவுகள், பேச்சுக்களில் பத்திரிகைகளில் தவறுதலானசெய்திகள் வெளிவருவதால் இவைகளை பொலிஸ் பகுதிக்கென தனியாகச் சேகரிப்பதற்காகவே இப்பிரிவு நிறுவப்படுகின்றது.

பொதுத்தேர்தல் காலத்தில் இப்பொலிஸ் பகுதி ஊழியர்கள் துரிதமாக இயங்குவார்கள்என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# சிறைச்சாலை கைதியின் மரணம் கொலைஎன தீர்ப்பு

யாழ்ப்பாணம்,வெள்ளி கைதி ஒருவரின் கொலை சம்பந்தமாக கைதான மற்றக்கைதி மீண்டும் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.நோமன் என்ற கைதியின் மரணம் கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டதைத் தொடர்ந்தே சந்தேக நபரான சுமனபால மீண்டும் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

ஸ்தலவிசாரணை நடாத்திய யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் சந்தேக நபரை இன்று யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்

மரணமான நோமனின் சடலம் பிரேத பரிசோதனைசெய்யப் பட்டபின் உறவினர்கள் எவரும் வராததால் ஆஸ்பத்திரி சவச்சாலையில் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் உதவி பொலிஸ் சுப்ரின்டன் திரு. எஸ். பி. டி. சில்வா இக் 'கொலை'சம்பந்தமான முழு விசாரணைக்கும் பொறுப்பாக விருந்தார். (கா. நி)

## சம்பளஉயர்வு கோரி 'மகஜர்'

கொழும்பு, வியாழன் தனியார்துறை ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கவேண்டுமெனக் கோரும் மகஜரொன்றை எதிர்க்கட்சி கூட்டணி தொழிற்சங்கங்கள் முதலாளிமார் சம்மேளனத்திடம் சமர்ப்பித்துள்ளன.

## அடையாள வேலைநிறுத்தம்

கொழும்பு, வியாழன் துறைமுக கூட்டுத்தாபன ஊழியர்கள் சம்பள உயர்வு கோரி நாளை ஒருநாள் அடையாளவேலைநிறுத்தம் செய்ய தீர்மானித்துள்ளார்கள்.

# டிக்கட் கொடுத்தவரை பொலிஸார் தேடுகின்றனர்

கொழும்பு, வியாழன் கதிர்காமம் ஆற்றங்கரையில் கண்டெடுக்கப்பட்டதாகக் கூறி பொலிசில் ஒப்படைககப்பட்டிருந்த 265வது தேசியசுவீப் டிக்கட் ஒரு போலி டிக்கெட் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

டிக்கட் போலிஎன்பதைக் கண்டுபிடிக்கப் பட்டதைத் தொடர்ந்து அதை பொலிசில் ஒப்படைத்தவரைப் பொலிசார் தற்போது தேடிவருகின்றனர்.

07 Q 0287 இலக்கம் பொறிக்கப்பட்ட டிக்கட்டுடன், 26 சதமும் சிறிய சவற்காரத் துண்டொன்றும் ஊசி ஒன்றும் கண்டெடுக்கப்பட்டு, சாந்தா பரணகேலயனல் பெரேரா என்பவரால் இம்மாதம் 30-ம் திகதி பொலிசில் ஒப்படைக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

# "மக்கள் கொடுத்த உரிமைகளை நாம் துஷ்பிரயோகம் செய்யவில்லை"

## சாவகச்சேரி எம். பி.

மட்டுவில்,வியாழன் 'எமது சொந்த சொத்துக்களை இஷ்டம்போல் பிரயோகிக்கலாம். ஆனுல் பொதுமக்கள் கொடுத்த அதிகார உரிமைகளை என்றைக்கும் அவ்விதம் நினைத் படி நாம் பிரயோகிக்க வில்லை. தமிழரசுக்கட்சி என்ருவது தனக்கு மக்கள் கொடுத்த அதிகார உரிமைகளை துஷ் பிரயோகம் செய்ததுமில்லை செய்யப் போவதுமில்லை. அவ்விதம் நிரூபித்தால் உடனே பொதுமக்கள்எம்மை அரசியலிலிருந்து ஒதுக்கிவிடவேண்டியது கடமை'

இவ்வாறு கைதடி கிழக்கு தமிழரசு வாலிப முன்னணிக் கிளை அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசிய சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம் கூறிஞர்.

கிளைத்தலைவர் திரு. அ. கணேசலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

''ஒரு அரசியல் கட்சியின் கொள்கை எவ்வளவுதான் உயர்ந்ததாக இருந்தபோதிலும், அக்கட்சியின் தலைவனிடத்தில் தியாக மனப்பான்மையும், கடமை உணர்ச்சியும், உண்மையும் நேர்மையும் இல்லாதிருப்பின், அக்கட்சியின் கொள்கை, பொதுமக்களிடையே என்றும் நல்லெண்ணத்தையும், அபிமானத்தையும் பெற்றுக் கொள்ள முடியாது போவதுடன், அக்கட்சியின் கோட்படுகளின் பலனும் பொதுமக்களிடையே பிரதிபலிக்க முடிவதில்லை''.

கிளையின் தலைவராக திரு. அ. கணேசலிங்கமும், உப

(4-ம் பககம் பார்கக)

## இன்று

வண்ணைஸ்ரீவைத்தீஸவரன் ஆலயத்தில் இன்று மாலை 6 மணிமுதல் இரவு 7 மணிவரை வித்துவான் திரு க.கி நடராஜன் பெரியபுராண பிரசங்கத் தொடரில் 'சாய்ந்த பெருமானைச் சேர்ந்த அடியார்'என்னும் பொருள் பற்றிய பிரசங்கமும், இரவு 7மணிக்குநவராத்திரிகொலு அம்மன் பூஜையும் நிகழும்.

# சோயஸ்-6 பூமி திரும்பியது

மாஸ்கோ, அக். 16 ரஷ்ய விண்வெளி கலமான சோயஸ்-6 பத்திரமாக நேற்று பூமியில் இறங்கியது. அண்டவெளியில் பொருந்தும் சோதனையை நடத்தியபின் சோயஸ்-6ல் சென்ற விண்வெளிவீரர்களானகேணல் ஜோர்ஜி ஷோனனும், டாக்டர் குமாஸ்வாவும் பூமிக்கு திரும்பினுர்கள். சோவியத் மீட்பு கோஷ்டியினரால், விண்வெளி கலமான சோயஸ்-6 மெதுவாக இறக்கப்பட்டது. சோயஸ்-7, சோயஸ்-8 விண்வெளிக்கலங்கள் தொடர்ந்து சுற்றிக கொண்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### தேவை

கணக்காளர் / குமாஸ்தா, 22 வயதிற்குட்பட, ஆங்கில தட்டெழுத்து தெரிய வேண்டும். விண்ணப்பிக்கவும். ராமகிருஷ்ணுஸ், ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 1477

ட்ரைவர்:

Heavy Car லைசென்ஸ் உடையவர் தேவை. தொடர்பு கொள்க: வின்ஸர் தியேட்டர், யாழ்ப்பாணம். 1480

நல்ல நிலைமையிலுள்ள 40 பேஸ் அக்கோடியன் விற்பனைக்கு உண்டு. சி. ஆனந்தராசா, ஆசிரியர், அமெரிக்கன் மிஷன் கல்லூரி, உடுப்பிட்டி 1475

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள வீட்டு பரங்கள், ஊர் ஓடுகள், நிலைகள், யன்னல்கள், கதவுகள். நேரில் மனுச் செய்க. 54, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 1481

ஆதனம்:

யாழ்ப்பாணம் 81, மணிக்கூட்டு வீதியில் 1 3/4 பரப்பு காணி வீடு, தனிக் கிணறு, கக்கூஸ் முதலிய வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு. விலை ரூபா 42000/- 30-ந் திகதிக்கு முன் கடித மூலமும் நேரிலும் தொடர்பு கொள்க. R. S. சர்மா, 497/263, பள்ளப்பிட்டி முருகன் கோவில், குளியாப்பிட்டியா. 1483

வைமன் வீதியிலுள்ள 2 பரப்பு சதுரமான காணி விற்பனைக்குண்டு. நல்லூர் கந்த சுவாமிகோவிலுக்கருகாமையில் நல்ல தண்ணீர் வசதியுடன் உண்டு. விபரங்களுக்கு ரி. தருமலிங்கம், 41, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 1482

## நிர்வாகிகள்

உடுவில், வியா

மானிப்பாய் மெமோரியல் மகாவித்தியாலய கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் பாடசாலை அதிபர் திரு. வி. ஜி. சம்பந்தன் தலைமையில் நடைபெற்றது. சங்கத்தில் பல ஆண்டுகளாக தனுதிகாரியாக பதவி வகித்து திறம்பட செயலாற்றி அண்மையில் மாற்றலாகிச் சென்ற திரு எஸ். ரி அனல்ட் ஆசிரியரின் சேவையைப் பாராட்டித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சங்கத்தின் புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: திரு வி ஜி சம்பந்தன், உபதலைவர்: திரு எஸ் சுவாமிநாத ஐயர், செயலாளர்: திரு டபிள்யூ ஜி அன்னப்பா, பொருளாளர்: திரு எம் குமாரவேலு.

நிர்வாக சபை உறுப்பினர்களாக திருமதி ஜெயநாயகம், திருமதி மேதர், செல்வன் தேவராஜன், செல்வி சிவகாம சுந்தரி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## நால்வருக்கு அபராதம்

வல்வெட்டித்துறை, வியா.

வல்வெட்டித்துறையில் சூது விளையாடிய நான்கு பேருக்கு பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராசா தலா ரூபா 75 அபராதம் விதித்துள்ளார். இதுசம்பந்தமாக தலைமறைவாக இருந்து வரும் இரத்தினம் என்பவருக்கு மாஜிஸ்டிரேட் வாரண்ட் பிறப்பித்துள்ளார்.

### விற்பனைக்கு

ஸ்ரீ காந்தா அச்சக வெளியீடு 1969 டிசம்பர் பரீட்சை G.C.E. (O/L) தமிழ்மொழி —பகுதி 1 மாதிரிகை வினுத்தாள்கள் பத்து இடம் பெற்றுள்ள பத்தாம் தமிழ்மலர்ப் பயிற்சி வினு-விடை விலை 3 ரூபா. ஸ்ரீ காந்தா அச்சகம் - புத்தகசாலை யாழ்ப்பாணம். 1476

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 17—10—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ அன்ட் 61 மீ**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 பண்ணுரிந்தமிழ், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 குரான், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ அன்ட் 49 மீ**

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 மாணவர் மன்றம், 1-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ அன்ட் 61 மீ**

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00செய்திச்சுருக்கம் 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 ஓடிவிளையாடுபாப்பா, 5-45 படத்திலிருந்து.

இரவு6-15இசைப்பயிற்சி, 6-30 கிராமசஞ்சிகை,7 -00 செய்திச்சுருக்கம், 7-03 வயலின்இசை, 7-35 வானெலி குறுக்கெழுத்துப் போட்டி, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர்விருப்பம், 10-30செய்திச்சுருக்கம்.

---

பருத்தித்துறை,வியாழன்

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திற்கும், அல்வாய் மனோகரா கோஷ்டிக்குமிடையே நடந்தஉதைபந்தாட்டப்போட்டியில் நெல்லியடிக்கோஷ்டி 2:1 கோல்களால்வெற்றியீட்டியது நெல்லியடிமத்திய மகாவித்தியாலயக்கோஷ்டி கப்டன் கே சிறீதரனின் ஆட்டம்மிகவும் பாராட்டப்பட்டது. திரு. எஸ் சதானந்தன் மத்தியஸ்தராகக்கடமையாற்றினுர்.

# இரு போட்டிகளிலும் நெல்லியடி வென்றது

பருத்தித்துறை, வியாழன்

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கஆதரவில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி2-ம் பிரிவுக் கோஷ்டியும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய 2-ம் பிரிவுக் கோஷ்டியும் நெல்லியடி மைதானத்தில் மோதிக்கொண்டபோது நெல்லியடிக் கோஷ்டி 1-0 கோல்களால் வெற்றியீட்டியது. வெற்றியீட்டிய கோஷ்டியில் கலாமணி, நாகேந்திரன் ஆகியோர் திறமையுடன் விளையாடினர், திரு. டி. எம் வேதாபரன் மத்தியஸ்தம் வகித்தார்

இரு கல்லூரிகளின் 3-ம் பிரிவுக் கோஷ்டிகளுக்கிடையே நடந்தபோட்டியில் நெல்லியடிக் கோஷ்டி 4—1 கோல்களால் வெற்றியீட்டியது. நெல்லியடிக்கோஷ்டியில் குணுளன், மூர்த்தி ஆனந்தன் ஆகியோரின் விளையாட்டு பாராட்டப்பட்டது.

திரு. ரி. வில்வராஜ் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

## தமிழரசு வா. மு. கிளை உறுப்பினர்

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேலணை வாலிப முன்னணிக்கிளை உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: சு. சனகரெத்தினம், துணைத்தலைவர்: எ. அமிர்தலிங்கம், செயலாளர்: ஆ. சந்திரசேகரம், துணைச் செயலாளர்: செ. கோபாலபிள்ளை, பொருளாளர்: இ. சிவசுப்பிரமணியம்.

செயற்குழு உறுப்பினர்: சி. முத்துத்தம்பி, வே. பாலசிங்கம், நவரத்தினம் செ. அன்னக்கிரி, சி. சின்னத்தம்பி, க. சோமசுந்தரம், கா. துரைராசா, ச. மகேந்திரன், த. தர்மகுணசிங்கம், த. குமாரசாமி, வை. சபாரத்தினம்.

## ஜப்பான் செல்லும் இரு அரசாங்க அதிபர்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு பிரான்சிஸ் பீட்டர்ஸ், மன்னுர் அரசாங்க அதிபர் திரு. எஸ் கதிர்காமநாதன் ஆகிய இருவரும் அடுத்த மாத நடுப்பகுதியில் ஜப்பானுக்குச் செல்லவிருக்கின்றனர்

ஜப்பானிய அரசாங்கத்தின் அழைப்பின் பேல் செல்லும் இவ்விரு அரசாங்க அதிபர்களும் 3 வார விவசாய சுற்றுலா ஒன்றை ஜப்பானில் மேற்கொள்வார் எனத் தெரிகிறது.(தே. நி.)

## வர்த்தமானி வரவில்லை

கொழும்பு, வியாழன்

அரசாங்க அச்சக ஒப்பு நோக்காளர் வேலைநிறுத்தத்தினுல் இவ்வார வர்த்தமானியும், கன்சாட்டும் வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

வேலைக்குத் திரும்பியவர்கள் அமைச்சரிடம் மன்னிப்பு கேட்கவேண்டும் என்ற சுற்றறிக்கையை வாபஸ் பெறும்வரை வேலை செய்வதில்லையென கூட்டுத்தாபன ஊழியர்கள் முடிவு செய்துள்ளனர்.

## மெட்ரூஸ் லொட்ஜ் திறப்புவிழா அழைப்பு

நிகழும் சௌமிய வருடம் ஐப்பசி மாதம் 1-ம் திகதி (17-10-69) வெள்ளிக்கிழமை காலை 7-00 மணிக்கு

யாழ். நகரசபை முதல்வர்

**திரு. சி. நாகராஜா அவர்கள்**

''மெட்ரூஸ் லொட்ஜ்'' என்னும் ஸ்தாபனத்தை திறந்துவைப்பார். மேற்படி வைபவத்திற்கு அனைவரும் சமுகம் தரும்வண்ணம் அன்புடன் அழைக்கின்ருேம்.

இங்ஙனம்

மெட்ரூஸ் லொட்ஜ்
ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.

தங்கள் ஆதரவை நாடும்
க. காசிநாதன்
பா. ரதீந்திரன் (ரவி)

1793

## நன்றி நவிலல்

# செய்திச் சுருக்கம்

### புதிய சம்பள விகிதம்

கொழும்பு, வியாழன்

ஸ்தலஸ்தாபன ஊழியர்களுக்கு அக்டோபர் 1-ந் திகதி முதல் மற்றும் ஊழியர் போல் புதிய சம்பள விகிதம் வழங்கப்படுமென உள்ளூராட்சி மந்திரி திரு. ஆர். பிரேமதாசா தெரிவித்திருக்கிருர்.

0 0 0

### சமசமாஜ செனட்டர்

கொழும்பு, வியாழன்

சமசமாஜக்கட்சியின் செயற்குழு, திரு. வில்லியம்ஸ் என்பவரை செனட்டராக்குவதென தீர்மானித்திருப்பதாக அறியப்படுகிறது. இக்கூட்டத்தில் தமிழர் ஒருவரின் பெயரும் பிரஸ்தாபிக்கப்பட்டதாம்.

0 0 0

### ரூபா 40 லட்சம் நஷ்டம்

கொழும்பு, வியாழன்

டயர் கார்ப்பரேஷனில் நடந்த வேலைநிறுத்தத்தால் சுமார் 40 லட்சம் ரூபா நஷ்டமேற்பட்டுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது.

0 0 0

### பேர்ஸி மறுப்பு

கொழும்பு, வியாழன்

தாம் தூதுவராக நியமிக்கப்படவிருப்பதாக வெளிவந்த செய்தியில் உண்மையில்லையென கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. பேர்ஸி விக்கிரமசிங்கா மறுத்துள்ளார்.

## நாவலர் பேச்சுப்போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

இருபாலை சைவபரிபாலன சங்கக்கொழும்புக்கிளை கடந்த 9 ஆண்டுகளாக நடத்திவரும் நாவலர் பேச்சுப் போட்டி அடுத்தமாதம்22-ம் திகதி காலை 9மணிக்குசோப்பாய் அரசினர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது.

இப்போட்டிகளில் பங்குபற்றவிரும்புபவர்களில்கீழ்ப்பிரிவினர் (10 வயதுக்குட்பட்டவர்கள்) ''நல்லை நகர் நாவலர்'' அல்லது ''நாவலரும் நற்பணியும்'' என்பது பற்றி 4 நிமிடங்களும், மத்தியபிரிவினர் (14 வயதிற்குட்பட்டவர்கள்) ''சைவநெறி காத்த நாவலர்'' அல்லது ''நாவலர் அன்று தோன்ருவிட்டால்?'' என்

# நவராத்திரி விழா

மாங்குளம் காணி அபிவிருத்திப்பகுதி இந்துமா மன்றத்தின் ஆதரவில் நாளைய மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நவராத்திரி விழா நடைபெறவிருக்கின்றது ரசிகமணி கனக செந்தில் நாதன், ஆசிரியர் சி, கனகநாயகம் ஆகியோரின் சொற்பொழிவும் சங்கீத பூஷணம் செல்வி நேசபூபதி நாகலிங்கம் புலோலியூர் பாலகிருஷ்ணன் ஆகியோரின் சொற்பொழிவும் விழாவில் இடம்பெறும். (கா. நி)

0 0 0

யாழ்ப்பாணம்,வெள்ளி

திருநெல்வேலி சைவ முன்னேற்றக் கழகத்தின் ஆதரவில் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரிச் சந்தி விநாயகர் ஆலயமுன்றலில் நடைபெற்றுவரும் நவராத்கிரி விழா இன்றைய நிகழ்ச்சிகளுக்கு இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு.எஸ். தம்பித்துரை தலைமை வகிப்பா

இன்றைய நிகழ்ச்சிகள் விபரம்: கழக மாணவர்களின் கீதம், திவ்ய ஜீவன சங்கத்தின் பண்ணிசை உள்நாட்டு இறைவரித் திணைக்கள உதவி ஆணையாளர்திரு கே. தனபாலசிங்கம் சிறப்புச் சொற்பொழிவு, சைவப் புலவர் க. சிற்றம்பலம் பேச்சு, லிங்கம் சகோதரர்களின் இன்னிசை. (கா. நி)

0 0 0

உடுவில் கிராமசபை திறந்தவெளியரங்கில் நடைபெறும் நவராத்திரி விழாவின் இன்றைய நிகழ்ச்சிகள்: வருமானவரி இலாகா அதிபர் திரு கே. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

எம். பஞ்சாபிகேசன் குழுவினரின் நாதஸ்வரம், சபாசதாசிவம் குழுவினரின் வில்லிசை, திரு பொன் சுந்தரலிங்கத்தின் இன்னிசை ஆகியன விழாவில் இடம்பெறும்.

நெல்லியடியில்

## பொலிஸ் பந்தோபஸ்து

பருத்தித்துறை,வியா

நெல்லியடிப் பகுதியில் அண்மையில் நடந்த சில கோஷ்டிச் சண்டைகள் காரணமாக மேலதிக பொலிஸ் படையினர் பிற நிலையங்களிலிருந்து வருவிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை நிலையத்தில் போய பொலிசார் இல்லாமையே இதற்குக் காரணமாகும். அசம்பாவிதங்கள் தொடர்ந்துநீடிக்குமாயின் நெல்லியடியில் ஓர் உபபொலிஸ் நிலையம் நிறுவப்படவேண்டிய அவசியம் ஏற்படலாமெனத் தெரிகிறது.

## திருவடி நிலையில் காவல்

சுழிபுரம்,வியாழன்

சுழிபுரம்-திருவடி நிலையில் நடைபெறும்,காடைத் தனம் கடத்தல் போன்ற சம்பவங்கள் மேலும் நடைபெருமல் தடுப்பதற்கு ஒரு காவலாளரை நியமிக்க சுழிபுரம் கிராமசபைத் தலைவர் திரு. சு. கந்தசுவாமி நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

திரு கந்தசுவாமி அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டு அண்மையில் நடைபெற்ற சில காடைத்தன சம்பவங்களை எடுத்து விளக்கியுள்ளார். கிராமசபைசார்பில் ஒருகாவலரை நியமிக்க விருப்பதாக கிராமசபைத்தலைவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை
றஞ்சனு தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா 2-30
எம். ஜி. ஆர் - சரோஜாதேவி
நடித்த
மாடப்புரு

ஸ்ரீ காலிங்கா
இணுவில்
தினசரி ,6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
ஜெமினி கணேசன் - பத்மினி
நடித்த
மல்லிகா

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
சிவாஜி - நிர்மலா
சௌகார் ஜானகி
நடித்த
லக்ஷ்மி கல்யாணம்
இப்பொழுது திரையிடப்படுகின்றது

புகையிலையும் காய்கறியும்
பயிரிடும் கமக்காரரே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகையிலையும் காய்கறியும்

## பயிரிடும் கமக்காரரே !

# பொஸ்றின்

அழுகணவணியும் மற்றெல்லாக் கிருமிப்பீடைகளேயும் ஒழிக்கவல்லது.

உடனே செயலாற்றும் சக்தி வாய்ந்த இந்த ரசாயனப்பொருளை அறுவடைக்கு முதல்நாள் வரை தெளிக்கலாம்.




ஷெல் ரசாயனப் பொருட்கள் பாவித்து அதிக உணவு பயிரிடுக

ஷெல் ரசாயனப் பொருட்கள்

SHELL

ரசாயனபபொருளை நினையுங்கள், ஷெல்லை நினையுங்க 'அலறெக்ஸ்', 'டீல்றெக்ஸ்' 20, 'டீல்றெக்ஸ் எக்ஸ்டரா', 'ஆர்கொடீன்', 'என்றெக்ஸ்' 20, 'பிட்றின்', 'மலதியன்', 'சுமத்தியன்', ஷெல் களைப்புற்கொல்லி 'எம் 50', 'ஸ்டாம்' எப-34, 'கிறமவின்', ஷெல் பீ. எச். சி 10% தூள் இவை ஷெல் ஸ்தாபனத்தாரின் விரிவான விவசாய ரசாயனப் பொருட்களில் சில மாத்திரமே


கன்ளேரும்.

இங்ஙனம்
தங்கள் ஆதரவை நாடும்
க. காசிநாதன்
பா. ரதீந்திரன் (ரவி)

மெட்ருஸ் லொட்ஜ்
ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
1793

## நன்றி நவிலல்

எமது அருமைப் புதல்வி செல்வி இராசலட்சுமி (வசந்தி) சிவஞானப்பிரகாசம் 7-10-69-ல் இறைவன் திருவடி நீழலை அடைந்தமை முன்னிட்டு நேரில் சமுகமளித்தோர்க்கும், அனுதாபச் செய்திகள் தெரிவித்தோர்க்கும் சகல வித த்தி லும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது உளங் கனிந்த நன்றி அறிதலைத் தெரிவிக்கின்றோம். இவ் அறிவித்தலை தனிப்பட்ட முறையில் யாம் தெரிவிக்கும் நன்றி அறிதலாக ஏற்றுக் கொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
பெற்றோர்
சி. வே. சிவஞானப்பிரகாசம்,
சி. லீலாலட்சுமி.

1794

# இன்றைய பலன்

ஐப்பசிமாதம் 1-ந் திகதி (17-10-69)

**மேஷம்**- புத்திரவழியால் புகழ்வந்து சேரும் வெளியூர் புதினமும் உண்டு. குடும்பத்தில் சுமுகமானநிலை தென்படும். புதிய தொடர்புகள் ஏற்படும். அதன்வழி முன்னேற்றமும் மகிழ்ச்சியும் தென்படும்.

**ரிஷபம்**- எதிர்பாராத முடிவுகள் ஏமாற்றத்தை தரலாம். எதிரிகளின் சூழ்ச்சி பலமாக இருக்கும். பழைய நினைவுகள் துன்பத்தைக் கொடுக்கும். தனிவழிப் பயணத்தை தவிர்த்தல் நன்று.

**மிதுனம்**- காதல் விவகாரங்கள் தலைதூக்கும். இனிமையான சம்பவ கள் இடம் பெறும். களஸ்திரவழியால் பொருள்வரவுக்கும் இடமேற்படும். பெரியோர்கள் ஆதரவுகிடைக்கும் சுண்ணியமான தினம்.

**கடகம்**- தொழில்புரியும் இடத்தில் தொல்லைகள் தோன்றக்கூடும், இதன்மூலம் பொருள் விரயத்திற்கும் இடமுண்டு. மேலதிகாரிகளின் கண்டனங்களுக்கும் ஆளாவீர்கள் அடக்கம்வேண்டும்.

**சிம்மம்**- இறைவழிபாடு மேலிடும், இதயத்தில் அமைதியும் ஏற்படும். பிதாவழிமூலம் நல்லசெய்தியும் கிடைப்பதற்கு இடமுண்டு. முதியவர் ஒருவர் உங்களுக்கு தக்க சமயத்தில் ஆதரவு தருவார்.

**கன்னி**- நண்பர்களின் உபத்திரவங்கள் அதிகமாகும். செலவுவகைகள் அதிகமாக இருக்கும். கடன்படவும் நேரிடலாம். நம்பிக்கை மோசடியும் நடக்கலாம். எனவே அவதானம் வேண்டும்.

**துலாம்**- செய்தொழிலால் சிறப்புண்டு, மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும். சிலருக்கு அதிஷ்ட லாபங்களும்கிடைக்கலாம். சுற்றுடலில் நல்லதிருப்பம் ஏற்படும். உற்சாகமான தினம்.

**விருச்சிகம்**- எதிர்பாரதவகையில் பொருள்விரையமாகும். கொடுக்கல் வாங்கல்களால்பிணக்குகள் ஏற்படும். நண்பர்களை பகைத்துக்கொள்வீர்கள் வீணை சிந்தனைகளுக்கு இடமளியாது இருக்கவும்.

**தனுசு**- கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும். சிலருக்கு பதவி உயர்வும் ஏற்படலாம். வெளியிடத் தொடர்புகள் மூலம் செல்வாக்கும் பெருகும். நீண்டநாள் பிணக்குகள் இன்று நிவர்த்தியாகும்.

**மகரம்**- வாழ்க்கையில் புதிய அபிவிருத்தி தென்படும். சுற்றுடலின் உற்சாகமான வரவேற்புக்கிடைக்கும். அதிகவருவாய்க்கு இடமுண்டு. கலைஞர்களுக்கு பொன்னான தினம்.

**கும்பம்**- துன்பத்தின் ரேகைகள் படரும். எதற்கெடுத்தாலும் சீறிவிழுவீர்கள். கொடுக்கல் வாங்கல் மூலம் ஏமாற்றமடைய நேரிடும். தொழில் துறையிலும்தொல்லைகள் தோன்றி மறையும்.

**மீனம்**- மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான தினம். கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு. தாய்வழி ஆதரவு தாராளமாய்க் கிடைக்கும். வாகன நலனுக்கும் இன்று இடமுண்டு.

**சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை**

பிரிவினர் (10 வயதுக்குட்பட்டவர்கள்) ''நல்லை நகர் நாவலர்'' அல்லது ''நாவலரும் நற்பணியும்'' என்பது பற்றி 4 நிமிடங்களும், மத்தியபிரிவினர் (14 வயதிற்குட்பட்டவர்கள்) ''சைவ நெறி காத்த நாவலர்'' அல்லது ''நாவலர் அன்று தோன்று விட்டால்?'' என்பது பற்றி 6 நிமிடங்களும், மேற்பிரிவினர் (18 வயதிற்குட்பட்டவர்கள்) ''நாவலர் இன்று இருந்தால்?'' அல்லது ''நாவலரும் சமய மறுமலர்ச்சியும்'' என்பது பற்றி 8 நிமிடஙகளும் பேசுவதற்கு அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இப்போட்டிகளில் பங்கு பற்றுவோர் தமது விண்ணப்பங்களை பாடசாலை அல்லது சமய ஸ்தாபனங்கள் மூலமாக அடுத்தமாதம் 7-ம்திகதிக்குள் கிடைக்கக்கூடியதாக செயலாளர், இருபாலை சைவபரிபாலன சங்கக் கொழும்புக்கிளை 135, கியூ வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளனர்.


## வெஸ்லி சினிமா

மானிப்பாய்
தினசரி 6-30, இரவு 9-30
பிரிபோயா, போயா 2-30மணி
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
**பாலும் பழமும்**

## ராஜா

(யாழ்ப்பாணம்)
Daily 4-45, 7, 9-45 P.M.
Poya, Prepoya 4 Shows
Beautiful Girls Daring acts
in
SEXY ALLNEON
(Adults only)

## REGAL JAFFNA

Daily 4-45, 7& 9-45p m.
Poya, Prepoya 4 Shows
Christopher Lee
Maria Rohm
in
THE BLOOD OF FU MANCHU
(Adults Only)

## MANOHARA

JAFFNA
Daily 4-45, 7-00& 9-45pm
Poya Prepoya 10-30 A. M.
Restless Reckless Violent-
There never was a man like
'B L U E'
Terence Stamp
Joanna Petter
in
'B L U E'
(Scope-color)

(யாழ்ப்பாணம்)
[தினசரி 8 காட்சிகள்]
சௌகார் ஜானகி
நடித்த

# லக்ஷ்மி கல்யாணம்

இப்பொழுது திரையிடப்படுகின்றது

வின்ஸர் - (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன், ஜெயலலிதா,
நாகேஷ்
நடித்த


# அன்று கண்ட முகம்

இப்பொழுது நடைபெறுகிறது

## வெலிங்டன்

[யாழ். நகர்]
தினசரி 2-30, 6-30 9-30 போயா, பிரிபோயா 4 காட்கள்

கெப்பிட்டல் (கொழும்பு) | பிளாஸா (கொழும்பு)



ரவிச்சந்திரன் ★ ராஜஸ்ரீ
நாகேஷ் ★ அசோகன் ★ ஸ்ரீரஞ்சனி
வசந்தா ★ மனோகர்
நடித்த
ஐரிஸ் மூவிஸாரின்

# நீயும் நானும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமாலியா குடியரசுத் தலைவர் படுகொலை

## நாட்டை சுற்றிப் பார்க்கையில் நடந்த பரிதாபச் சம்பவம்

## வெளிநாடு சென்ற பிரதமமந்திரி அவசரமாகத் திரும்பிவருகிறார்

மோகாடிஷ்யூ, அக்டோபர் 16

**சோமாலியாவின் அதிபர் டாக்டர் அப்துல்லா அலி செர்மார்க்கி படுகொலை செய்யப்பட்டார்.**

**நேற்று வட சோமாலியாவில் அவர் சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டிருந்தபோது சுட்டுக்கொல்லப்பட்டார். இதுசம்பந்தமாகத் தென் சோமாலியாவைச் சேர்ந்த பொலிஸ் படை அதிகாரி ஒருவர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.**

டாக்டர் செர்மார்க்கி சோமாலியாவின் விடுதலை இயக்கங்களிலும், சீர்திருத்தங்களிலும் நிறையஈடுபாடு கொண்டிருந்தவர். திடீரென்று அவர் படுகொலை செய்யப்பட்டிருப்பது சோமாலியா மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கின்றது. பல இடங்களில் மோதல்களும் வன்முறைகளும் ஏற்பட்டன உடனடியாகவே ராணுவத்தினர் தலைநகரின் வீதிகளைத் தம்பொறுப்பில் எடுத்துக்கொண்டு அமைதியை ஏற்படுத்துவதில் ஈடுபட்டனர்.

இரவில் ஊரடங்குச்சட்டம் அமுலுக்குக்கொண்டு வரப்பட்டது. தெருக்களில் சந்தேகத்துக்குரிய முறையில் நடந்துகொள்ளும் எவரையும் சுட்டுத்தள்ளும்படி ராணுவத்துக்குத்தரவிடப்பட்டுள்ளது.

### தற்காலிக அதிபர்

அதிபர் கொலைசெய்யப்பட்டதையடுத்து சோமாலியா மந்திரிசபை உடனடியாகக்கூடி என்ன செய்வதென்று ஆராய்ந்தது அமெரிக்காவுக்குப் பிரயாணம் மேற்கொண்டிருந்த பிரதமமந்திரி உடனடியாகவே தமது பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிக்கொண்டிருக்கிறார். சோமாலியா குடியரசின் சட்டப்பேரவைத் தலைவர் தற்காலிகமாக அதிபர் பதவியை மேற்கொண்டிருக்கிறார்.

### ஐந்து நாள் துக்கம்

அதிபர் கொலைசெய்யப்பட்டதையடுத்து சோமாலியாவில் 5 நாட்களுக்குத் தேசிய துக்கம் அனுஷ்டிக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. அவரின் உடலம் ராஜமரியாதையுடன் மக்கள் தரிசனத்துக்காக அதிபர் மாளிகையில் வைக்கப்பட்டுள்ளது.

### முதல் பிரதமர்

டாக்டர் செர்மார்க்கி சோமாலியாவின் முதலாவது பிரதமராக இருந்தார். 1959-ம் ஆண்டு அவர் சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1960-ல் பிரதமரானர், 1967-ல் அதிபராகப் பதவியேற்றார். கொலை செய்யப்படும் வரை அதிபராகவே கடமையாற்றினர்.

அவர் பல நாடுகளுக்குப் போய்வந்திருக்கிறார். சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்கும் அவர் போய் வந்திருக்கிறார். 1962-ல் அமெரிக்காவுக்குப் போய் அதிபர் கென்னடியைச் சந்தித்திருக்கிறார்

### தலைவர்கள் கவலை

சோமாலியா அதிபர் படுகொலை செய்யப்பட்டிருப்பது குறித்து பல நாடுகளின் தலைவர்கள் தமது அனுதாபங்களை சோமாலியாவின் தற்காலிக அதிபருக்கு அனுப்பிவருகின்றனர். எதியோப்பிய மன்னர் ஹெயிலி செலாஸி அனுப்பியுள்ள அனுதாபச் செய்தியில் சோமாலிய மக்களுக்கு ஏற்பட்டுள்ள துக்கத்தில் தாமும் பங்குகொள்வதாகக் கூறியிருக்கிறார். வேறு பல நாடுகளின் தலைவர்களும் அனுதாபச் செய்திகள் அனுப்பியிருக்கிறார்கள்.

### சோமாலியா குடியரசு

சோமாலியா கிழக்கு ஆபிரிக்காவிலுள்ள ஒரு குடியரசு. ஏடன் வளைகுடா, இந்து சமுத்திரம், கென்யா, எதியோப்பியா, பிரஞ்சு சோமாலிலான்ட் ஆகியவற்றை எல்லைகளாகக்கொண்டிருக்கின்றது. 1960 ஜூலை 1-ம் திகதி குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. அப்துல்லா ஒஸ்மான் என்பவர் முதல் குடியரசின் தலைவராகத்தெரிவுசெய்யப்பட்டார். இவர் ஆறு ஆண்டுகள் அதிபராக இருந்தார் அதன் பிறகு 1966-67-ல் நடைபெற்ற தேர்தலில் நேற்றுக் கொலையுண்ட டாக்டர் செர்மார்க்கி இவரை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

## பிரயாணிகள் தங்குமடம்

மன்னூர், வியா.

மன்னூர் மக்கள் முன்னேற்றக் கழகம் சென்றமாதம் மல்யுத்தம் மூலம் திரட்டிய நிதியைக் கொண்டு மன்னூர் வைத்தியசாலையருகே பிரயாணிகள் தங்குமடம் ஒன்றை அமைக்கவிருக்கிறது இதற்கான அத்திபாரக்கல்லை இம்மாதம் 18ம் திகதி மன்னூர் எம். பி. திரு வீ. ஏ. அழகக்கோன் நாட்டிவைக்கவிருக்கிறார். சேர்ந்த நிதி பற்றாக் குறையாயிருப்பதாயும் மேலும் மக்களிடமிருந்து பணம் சேகரிக்கப்படுமென்றும் கட்டிட வேலைகள் ஒருமாதத்திற்குள் பூர்த்தியாகுமென்றும் கழகக் காரியதரிசி திரு. கையூம் தெரிவித்தார். கட்டிடம் பூர்த்தியானல் பல வருடங்களாக வெயிலிலும், மழையிலும் இதுவரை கஷ்டமுற்ற பிரயாணிகள் மிகுந்த பலனடைவர்.

## நவக்கிரக மண்டபம்

ஊரதீவு, வியா

புங்குடுதீவு- பாணவிடை தான்தோன்றிச் சிவன் கோவிலில் நவக்கிரக மண்டபம் இல்லாத குறைவிரைவில் தீரப்போகின்றது கடந்த வருடம் நடைபெற்ற திருத்த வேலைகளின் போது பணம் பற்றாக்குறை காரணமாக இம்மண்டபம் கட்டப்படவில்லை இப்போது ஊரதீவு வர்த்தகர்கள் சிலரின் உதவியுடன் கட்டிட வேலைநடைபெறவிருக்கிறது

## இம்மாதம் திறக்கப்படும்

மன்னூர், வியாழன்

சுமார் நாலரை லட்சம் ரூபா செலவில் மன்னூரில்

சோவியத்

## பெருந்தலைவர்களின் பிரான்ஸ் விஜயம்

பாரிஸ், அக். 16

சோவியத்பெருந்தலைவர்கள் மூவர் பிரான்சுக்கு விஜயம்செய்ய ஒப்புக்கொண்டிருப்பதாகத்தெரிகின்றது ஆனல் திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை.

சோவியத் அதிபர் பொட்கார்னி சோவியத் கம்யூனிஸ் கட்சித் தலைமைக்காரியதரிசி திரு பிரஸ்னேவ் பிரதம மந்திரி திரு. கோஸிஜின் ஆகியவர்களே இந்த மூன்று சோவியத் தலைவர்கள்.

மேற்கத்திய நாடு ஒன்றுக்கு இவ்வாறு மூன்று தலைவர்களும் ஒன்ருகவிஜயம் செய்வது இதுவே முதல் டவையாகும்.

சோவியத் யூனியனுக்கு பிரஞ்சு அதிபர் பொம்பிடோ அடுத்த ஆண்டில் விஜயம் செய்யவிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

துன்னலைப்பாலம்

## உப சபாநாயகர் திறந்துவைப்பார்

பருத்தித்துறை, வியாழன்

உள்ளூராட்சி அமைச்சினல் அளிக்கப்பட்டு துன்னலை ஊரெல்லைத் தெருவில் அமைக்கப்பட்டிருக்கும் வார்ப்புப்பாலத்தை உப சபாநாயகர் திரு எம். சிவசிதம்பரம் இம்மாதம் 20-ம் திகதிபிற்பகல் சம்பிரதாய முறைப்படி திறந்து வைப்பார்.

கோவிற்கடவைக் கிராம முன்னேற்றச் சங்கத்தினர் தலைவர் திரு வ. கங்ராசாவின் உதவியுடன் இவ்வைபவத்திற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர் தொடர்ந்துநடக்கவிருக்கும் பொதுக் கூட்டத்தில் உள்ளூராட்சிஆணையாளர் திரு ஏ. ஏ. யோசேப் உட்படப் பலர் உரைநிகழ்த்துவர்.

## பருத்தித்துறை நகரசபை தேர்தல்

வல்வெட்டித்துறை, வெள்ளி

பருத்தித்துறை நகரசபைத் தேர்தலுக்கான நிய

## சாரதியின் சாதுரியம்

காரைநகர், வியாழன்

நேற்றுமாலை யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகர் நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ் காரைநகர்பாலத்தில் விபத்துக்குள்ளாக வேண்டியநிலை ஏற்பட்டபோது இந்த பஸ்ஸைச் செலுத்திச் சென்றுகொண்டிருந்த சாரதி தமது திறமையினல் விபத்து ஏற்படாதவாறு தடுத்துவிட்டதாகத் தெரியவருகிறது.

ஒரு சைக்கிளில் இருவர் வந்துகொண்டிருந்ததாகவும் இவர்களாலேயே இந்த விபத்து ஏற்படவிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது ஏற்படவிருந்த பெரிய விபத்திலிருந்து தப்புவதற்காக சாரதி பஸ்ஸை ஒருபுறமாக செலுத்தியபோது பஸ் மதகுடன் மோதியதால் பஸ் சிறிது சேதமுற்றதாம்.

## "முதியோர் பாடசாலை வேண்டும்"

மல்லாகம், வியாழன்

"படித்த வாலிபருக்கு சிறிய அளவில் வர்த்தக் கல்லூரி ஒன்று நிறுவி வாலிபரின் வேலையில்லாப் பிரச்னையை இப்பகுதியில் தீர்ப்பதுடன், முதியோர்களுக்கும் பாடசாலை அமைத்துக் கொடுக்க சங்கம் அடுத்த ஆண்டில் நடவடிக்கை எடுத்தல்வேண்டு." இவ்வாறு திரு. வ. பொன்னம்பலம் தமது தலைமையுரையின் போது அளவெட்டி பல நோக்குக் கூட்டுறவுச்சங்க விசேஷ கூட்டத்தில் பேசும் போது கூறினர்.

சங்கத்திற்கு புதிய காணி மேலதிகமாக வாங்கி புதிய கட்டிடம் அமைத்தல், லொறி கொள்வனவு செய்தல் முதலியதீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

......

## இலவச வெளியீடு

யாழ்ப்பாணம், புதன்

நவராத்திரி விழாவை யொட்டி யாழ்ப்பாணம்



யாழ். விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற முதலுத[...] மாணவர்களின் அணிவகுப்பை சென். ஜோன்ஸ் அம்புலன்[...] படைத் தலைவர் கேர்ணல் றெக்லூட்டும், யாழ்ப்பாணப் பி[...] வுத் தலைவர் முகாந்திரம் ஈ. பி. இராசையாவும் பார்வையி[...] கின்றனர்.

## 'முதலுதவிக் கல்வி யாழ்ப்பாணத்தில் சிறப்புற்றுள்ளது'

### சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் தலைவர் பாராட்டு

யாழ்ப்பாணம், வெள்ளி

'யாழ்நகருக்கு வந்து இங்குள்ள முதலுதவிப் பிரிவை பார்வையிடுவதில் நான் மிக மகிழ்ச்சியடைகிறேன். யாழ்ப்பாணத்தின்பல பகுதிகளிலும் முதலுதவிக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறதென்பதை இங்கு நான் கணும் அணிவகுப்பிலிருந்து அறியக்கூடியதாகவிருக்கிறது.

பல்வேறு பிரிவினரின் உற்சாகமான அணி வகுப்பு இவ்வைபவத்தில் குறிப்பிடத்தக்க சிறந்ததொரு அம்சமாகும்

இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தசென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் தலைவர் திரு றெக்லூட் இங்கு நடைபெற்ற சென்ஜோன்ஸ் அம்புலன்சின் வருடாந்த விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டுஉரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அண்மையில் யாழ் விளையாட்டு மைதானத்தில் 400 க்கும் மேற்பட்ட முதலுதவி மாணவமாணவிகளின் அணிவகுப்பு நடைபெற்றது. இந்த அணிவகுப்பு மரியாதையை கேர்ணல் டி. என். றெக்லூட்டும், யாழ்ப்பாண மேயர் திரு எஸ். நாகராஜா இ. பி இராசையாவும்ஏற்றுக் கொண்டார்.

பொலிஸ், சாரணர் சிமெந்துத் தொழிற்சாலை யாழ் திருக்குடும்ப கன்னியாஸ்திரிமடம் இளவாலை கொண்வென்ற் அச்சுவேலி கொண்வென்ற் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி கோப்பாய் மகளிர் பயிற்சிக்கல்லூரி, பலாலி கனிஷ்ட பல்கலைக்கழகம், லங்கா ஆயுள்வேதக் கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த முதலுதவியாளர்கள் இவ்வணிவகுப்பில் பங்குபற்றினர்.

இவ்வணிவகுப்பை பார்வையிட்ட பின் உரைநிகழ்த்திய யாழ்ப்பாணமேயர் தமதுரையில்விழாவிற்குவருகை தந்த கேர்ணல் றெக்லூட்டையும் விழாவை சிறப்புற ஒழுங்குசெய்த முகாந்திரம் இ. பி. இராசையாவையும் பாராட்டினர்.

இறுதியில் கேர்ணல் றெக்லூட் முதலுதவிப் பரீட்சையில் வெற்றி பெற்றவர்களுக்கும் முதலுதவிப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கும் சான்றிதழ்களும், வெற்றிக்கேடயங்கள், வெற்றிக் கிண்ணங்களும் வழங்கினர்.

பலாலி கனிஷ்ட பல்கலைக் கழகத்துணை அதிபர் கே. சிவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்டிருந்த பிரதம மந்திரி உடனடியாகவே தமது பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிக்கொண்டிருக்கிறார். சோமாலியா குடியரசின் சட்டப்பேரவைத் தலைவர் தற்காலிகமாக அதிபர்

...இத்திருக்கிறார்.

**தலைவர்கள் கவலை**

சோமாலியா அதிபர் படுகொலை செய்யப்பட்டிருப்

...பெற்ற தேர்தலில் நேற்றுக் கொலையுண்ட டாகடர் செர்மார்க்கி இவரை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

...ரின் உதவியுடன் கட்டிட வேலை நடைபெறவிருக்கிறது

## இம்மாதம் திறக்கப்படும்

மன்னார், வியா

சுமார் நாலரை லட்சம் ரூபா செலவில் மன்னாரில் கட்டிமுடிக்கப்பட்ட இரண்டடுக்குக் கூட்டுறவுக் கட்டடம் இம்மாதக் கடைசியில் திறக்கப்படவிருக்கிறது. கூட்டுறவு வங்கி மற்றும் அலுவலகங்கள் பலவும் இங்கு செயல்படுமென்று தெரிகின்றது.

...பலர் உரைநிகழ்த்துவர்.

## பருத்தித்துறை நகரசபை தேர்தல்

வல்வெட்டித்துறை, வெள்ளி

பருத்தித்துறை நகரசபைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் இம்மாதம் 28-ம் திகதி தாக்கல் செய்யப்படவிருக்கிறது. சபையின் 9 வட்டாரங்களிலும் இம்முறை பெரும்பாலும் வாலிபர்களே போட்டியிடவிருப்பதாகத் தெரிகிறது.

...லொறி கொள்வனவு செய்தல் முதலிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

......

## இலவச வெளியீடு

யாழ்ப்பாணம், புதன்

நவராத்திரி விழாவையொட்டி யாழ்ப்பாணம் மில்க்வைற் சோப் ஸ்தாபனத்தார் நவராத்திரி வரலாறும் தேவி தோத்திரப் பாடல்களும் என்னும் சிறிய நூலொன்றை வெளியிட்டுள்ளனர். இந்நூல் அவர்களது 15-வது இலவச வெளியீடாகும்.

...யாட்டு மைதானத்தில் 400க்கும் மேற்பட்ட முதலுதவி மாணவமாணவிகளின் அணிவகுப்பு நடை பெற்றது. இந்த அணிவகுப்பு மரியாதையை கேர்ணல் டி. என். ஜெருக்லூட்டும், யாழ்ப்பாண மேயர் திரு எஸ். நாகராஜாவும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸின் யாழ்ப்பாணப் பிரிவுத் தலைவர் முகாந்திரம்

...யில் வெற்றி பெற்றவர்களுக்கும் முதலுதவிப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கும் சான்றிதழ்களும், வெற்றிக்கேடயங்கள், வெற்றிக்கிண்ணங்களும் வழங்கினார்.

பலாலி கனிஷ்ட பல்கலைக் கழகத்துணை அதிபர் கே. சிவபாலன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

ரபாத் மாநாட்டில்

# அரசியல் காரணங்களுக்காகவே பாரதம் கலந்துகொண்டதாம்

## தினேசிங் கூறுகிறார்

புதுடில்லி, அக். 16

ரபாத்தில் நடைபெற்ற முஸ்லிம் மகாநாட்டில் அரசியல் காரணங்களுக்காகவே இந்தியா கலந்துகொண்டதாக இந்திய வெளிஉறவு அமைச்சர் திரு. தினேசிங் கூறியிருக்கிறார்.

இஸ்ரேலியரின் வசமுள்ள ஜெரூசலத்திலுள்ள அல் அக்ஸா பள்ளிவாசல் எரிக்கப்பட்டதைத் தொடர்ந்து முஸ்லிம் நாடுகளின் தலைவர்கள் மொராக்கோ தலைநகரான ரபாத்தில்கூடி ஆலோசனைகள் நடத்தினார்கள். இந்த மகாநாட்டில் கலந்துகொள்ள இந்தியாவும் அழைக்கப்பட்டிருந்தது. ஆனால் பாகிஸ்தான் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து இந்தியத்தூது கோஷ்டி மகாநாட்டின் இறுதிக்கூட்டத்தில் கலந்துகொள்ளாமல் திரும்பிவர நேர்ந்தது.

இதனால் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையை மாற்றி அமைக்க வேண்டுமென்றும் இந்தியாவுக்கும் அவமானம் ஏற்படுத்தப்பட்டுள்ளதென்றும் பாரதத்தில் எதிர்க்கட்சிகள் பல வற்புறுத்திவந்தன. இவைகளுக்குப் பதிலளிக்கும் முகமாக திரு. தினேசிங் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

பாரதம் தனது தேசிய நலன்களைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டியிருந்தது. ரபாத் மகாநாட்டில் அரசியல் விஷயங்களையும் எழுப்புவதற்கு சில நாடுகள் முயற்சி எடுத்துவந்துள்ளன. பாரதத்துக்கு எதிராக முஸ்லிம் நாடுகளின் கோஷ்டியொன்றை உருவாக்க பாகிஸ்தான் முயன்றுவந்திருக்கிறது. இப்பொழுது பாகிஸ்தானின் எண்ணம் நன்றாக வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது என்று தினேசிங் கூறினார்.

பாகிஸ்தானில்

## வாக்காளர் பதிவு ஆரம்பம்

கராச்சி, அக். 16

பாகிஸ்தானில் வயதுவந்த பிரஜைகள் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கி ஜனநாயக முறையில் பொதுத் தேர்தல் ஒன்றைநடத்துவதற்காக வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் இன்று ஆரம்பமாகின. இந்த வேலைகள் அடுத்து ஆண்டுவாக்கில் முடிவடையும் என்று தெரிகின்றது.

## பஸ்நிலையத்தில் ஜேப்படி

### ஒருவர் கைது

யாழ்ப்பாணம், வெள்ளி

பஸ்நிலையத்தில் நின்ற புறக்டர் ஒருவரிடம் ஜேப்படி அடித்த ஒருவரைப் பொலிசார் கையும்மெய்யுமாகக் கைதுசெய்தனர். யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இச்சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

பொலிசாரைக் கண்டதும் ஓட்டம்பிடித்த சந்தேக நபரான அப்புநைதுகே புஞ்சிநாயுது என்பவரை சாதாரண உடையில் நின்ற பொலிஸ் கான்ஸ்டபிளான என். ஈ. இரத்தினமும், விஜயபாலாவும் கைது செய்து பொலிஸ் பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

# 52,000 வெளிநாட்டவர் பிரிட்டனில் பயின்றனர்

லண்டன், அக். 16

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளைச் சேர்ந்த 52,000 பேர் சென்ற வருடம் பிரிட்டனில் தொழில் நுணுக்கங்களில் பயிற்சி பெற்றனர். அதே வேளை பிரிட்டிஷ் உதவித்திட்டங்களின் கீழ் ஆணும் பெண்ணுமாக 15,000 பிரிட்டிஷ் நிபுணர்கள் மேற்படி நாடுகளில் சேவை புரிந்திருக்கின்றனர்.

பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்திஅமைச்சு வெளியிட்ட 'பிரிட்டிஷ் உதவி புள்ளிவிபரங்கள்' என்ற அறிக்கையில் இத்தகவல் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

1968-ம் ஆண்டு அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் வழங்கிய மொத்தத் தொகை 202,800,000 பவுண்கள் என்றும், 1967ல் 200,800,000 பவுண்கள் வழங்கப்பட்டதாகவும் இவ்வறிக்கை கூறுகிறது.

சென்ற ஆண்டு பிரிட்டன் வழங்கிய மொத்த உதவியில் 184,000,000 பவுண்களை 120 நாடுகள் பெற்றிருக்கின்றன. எஞ்சிய தொகை சர்வதேச உதவி ஸ்தாபனங்களுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருக்கிறது.

பிரிட்டனின் இரு அம்ச உதவித் திட்டத்தின் கீழ் சென்ற ஆண்டு 63,600,000 பவுண்கள் ஆசிய விலுள்ள சாம்ராஜ்ய நாடுகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதேவேளை ஆபிரிக்காவிலுள்ள சாம்ராஜ்ய நாடுகள் 63,200,000 பவுண்களைப் பெற்றிருக்கின்றன.

அபிவித்தியடைந்து வரும் நாடுகளின் கடன் சுமையை குறைக்கும் நோககத்துடன நான்கு வருடங்களுக்கு முன்பு பிரிட்டிஷ் அரசாங்கம் வட்டியில்லாக் கடனுதவித் திட்டமொன்றைஅமுலுக்கு கொண்டு வந்தது. இதனையடுத்து இந்த அடிப்படையில் பெருந் தொகையில் புதிய கடனுதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. 1968ல் வழங்கப்பட்ட கடனுதவிகளில் 84 விகிதமானவை வட்டியில்லாக் கடனுதவிகள் என்பதுகுறிப்பிடத்தக்கது.

# வடவியட்னாமுக்கு சோவியத் ராணுவ உதவி

மாஸ்கோ, அக். 14

வடவியட்னாமுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையில் செய்துகொள்ளப்பட்டுள்ள ஓர் உடன்படிக்கையின்படி வடவியட்னாமுக்கு சோவியத்யூனியன் அதிக ராணுவ உதவிகளையும் பொருளாதார உதவிகளையும் கொடுத்துதவும்.

வடவியட்னாம் பிரதம அமைச்சர் திரு. ஃபாம் வான்டொவ் தலைமையில் மாஸ்கோ விஜயம்செய்த வடவியட்னாம் தூதுக்குழுவுக்கும் சோவியத் பிரதமர் திரு. கோஸிஜின் தலைமையிலான குழுவுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பின்னர் இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின்படி வடவியட்னாமுக்கு ராணுவத் தளபாடங்கள் தோட்டாக்கள் வாகனங்கள், உணவுவகைகள், மருந்துகள் போன்றவற்றை சோவியத் யூனியன் அதிகமாகக் கொடுத்துதவும்.

தென்வியட்னாமுக்கு அமெரிக்கா ராணுவ, பொருளாதார உதவிகள் அளித்துவருவது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா தென்வியட்னாமுக்கு அளித்து வரும் ராணுவ பொருளாதார உதவிகளுக்கு ஏற்றாற்போல் வடவியட்னாமின் நிலையையும் பலப்படுத்துவதற்காகவே இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப் பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது, வியட்னாம் யுத்தம் மேலும் வலுவடைவதற்கு இது ஓர் அறிகுறியென்று பார்வையாளர்கள் கருதுகிறார்கள்.

வியட்னாம் போர்நிறுத்தக் கோரிக்கை

# அதிபர் அலட்சியம் செய்தால் மீண்டும் ஆர்ப்பாட்டம்

நியூயோர்க், அக். 16

வியட்னாம்போருக்குமுடிவு கட்டும்படி கோரி நேற்று அமெரிக்காமுழுவதும் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள் பொதுவாக அமைதியாகவே நடைபெற்றது. அங்குமிங்கும் சில சம்பவங்கள் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் வெள்ளைமாளிகையின் முன் வன்முறைகள் இடம்பெற்றதாகவும் அறிவிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டங்களிலும், பிரார்த்தனைகள் கோஷங்கள் ஊர்வலங்கள் போன்றவற்றில் ஈடுபட்டவர்கள் சுமார் 25 ஆயிரத்திலிருந்து 50 ஆயிரம் பேர் வரையில் வாஷிங்டன் சிலையின் முன் கூடி பிரம்மாண்டமான தொரு கூட்டத்தை நடத்தினார்கள்

ஆர்ப்பாட்டங்களுக்கு எதிராகவும் அதிபர் நிக்ஸனின் வியட்னாம் கொள்கையை ஆதரித்தும் ஏராளமானவர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டார்கள். இவர்கள் தேசியகொடிகளை பறக்கவிட்டு நிக்ஸன் நிர்வாகத்துக்கு ஆதரவு தெரிவித்தனர்.

வியட்னாம்போரை உடனடியாக முடிவுக்குகொண்டு வரும்படி நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள் அமெரிக்க மக்கள் மத்தியில் நல்ல அபிப்பிராயத்தைஉருவாக்கியிருக்கின்றது.

இந்த மக்கள் அபிப்பிராயத்தை நிக்ஸன் நிர்வாகம் புறக்கணித்துவிட முடியாது. இதனை அதிபர் நிக்ஸன் அலட்சியம்செய்தால் மீண்டும் பெரிய அளவில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும் என்று ஆர்ப்பாட்டங்களை நடத்தியவர்கள் அறிவித்துள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டங்களினால் தமதுவியட்னாம் கொள்கையைமாற்றிவிடமுடியாது என்று அதிபர் நிக்ஸன் ஏற்கனவே அறிவித்துள்ளார்.

# கூப்பன் புத்தகங்களை பறிமுதல் செய்ய உத்தரவு

## விவசாயக் கடனைத் தீர்க்கவில்லையாம்

மட்டுவில் வியாழன்

மட்டுவில் விளைவேலிப் பகுதி விவசாயிகளில் 1968—69-ம் ஆண்டிற்கான விவசாயக கடன் பெற்றுத்திருப்பிக் கட்டாதவர்கள் தமது அரிசிப்பங்கீட்டுப் புத்தகத்தைப் பறிகொடுக்கவிருக்கின்றனர். சுமார் 22 விவசாயக் குடும்பங்கள் இவ்வாரம்முதல் தமது அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களை இழக்கவிருக்கிறார்கள்.

மட்டுவில் சோமாஸ்கந்தா பலநோக்குச் கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் 1968—69-ம் ஆண்டிற்கான விவசாயக்கடன் பெற்ற சுமார் 25 விவசாயிகளில் 22பேர் இதுவரை தமது விவசாயக் கடனைத் திருப்பி அடைக்காததின் காரணமாக அவர்களின் இலவச அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களை பறிமுதல் செய்யுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு காலபோக விவசாயத்திற்காக இக்கடன் பெற்றுக் கொள்ளப்பட்டதென்றும் ஆனால் கடந்த ஆண்டு இயற்கை பொய்த்துவிட்ட காரணத்தால் விவசாயிகள் நிலை பெரிதும் கஷ்டமடைந்ததாகவும் இந்த நிலையில் கடன் தவணையை நீடித்துத் தரும்படி மகஜர்கள் அனுப்பியும் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு வி. என். நவரத்தினம் தலையிட்டும் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லையென்றும் இன்னும் 6 மாதகால அவகாசம் அளிப்பதன்மூலம் இப் பகுதி விவசாயிகளுக்கு அரசாங்கம் உதவவேண்டுமென்றும் பிரஸ்தாப விவசாயிகளில் சிலர் தெரிவித்தனர்.

## அலங்காரஉற்சவம்

மட்டுவில், வியாழன்

விளைவேலி மருதடிப் பிள்ளையாரின் ஐப்பசி வெள்ளி அலங்கார உற்சவம் இம்மாதம் 17-ம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது. ஐப்பசி மாதத்தில்வரும் பிரதி வெள்ளிக்கிழமையும் உற்சவம் நடைபெறும்.

## ரசாயன ஊழியர் சங்கக்கூட்டம்

மட்டுவில், வியாழன்

பரந்தன் ரசாயனஊழியர் நன்னோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின்வருடாந்தப்பொதுக் கூட்டமும், உத்தியோகத்தர்கள் தெரிவும் பரந்தன் ரசாயனத் தொழிற்சாலை போசன சாலையில் நடைபெற்றது.

கூட்டுறவுப் பரிசோதகர் திரு. எஸ். ஜே. செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பின்வருவோர் புதிய உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு என் இராமநாதன். உபதலைவர்: திரு. ஆர். சுப்பிரமணியம், செயலாளர். திரு. கே. எஸ். வேலாயுதம், உபசெயலாளர் திரு. ரி யேசுதாசன், பொருளாளர் திரு. ஆர். தம்பையா.

......

## ரூ 10,000 சேலைகள் சிக்கின

யாழ்ப்பாணம், வெள்ளி

சுமார் 10,000 ரூபா பெறுமதியானசேலைகளை மண்டைதீவிற்கு சமீபத்தில் காரொன்றில் வைத்து பொலிஸார் கள்ளக்கடத்தல் பொருட்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நேற்று கைப்பற்றினார்கள்.

இக்காரில் சென்ற நால்வரையும் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து சுங்கப்பகுதியினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

## இன்று

சுழிபுரம், வெள்ளி

இன்று மாலைவழக்கம்பறை அம்மன் கோவிலில் விசேட பூசையும், கூட்டுப்பிரார்த்தனையும் நடைபெறும். ''தேளியைச் சரணம்'' என்னும் பொருள் பற்றி வை. ஆனந்தசர்மா கதாப்பிரசங்கம் செய்வார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு
ஒவ்வொருவரும் தாய் மொழியில் தான் கல்விகற்க வேண்டும், அந்நிய மொழியை விருப்பப் பாட மாகத் தான் எடுத்துக் கொள்ள வேண்டும்.
— மகாத்மா காந்தி

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஐப்பசி மாதம் 1-ந் திகதி (17-10-69)

## வியட்நாம் விவகாரம்

வியட்னும் யுத்தத்திலிருந்து அமெரிக்கா தன்னை முற்று முழுதாக விலகிக் கொள்ளவேண்டுமென்று வற்புறுத்துவதற்காக அமெரிக்கா முழுவதிலும் பெருமெடுப்பில் ஏற்பாட்ட ஊர்வலங்களும் தீவட்டி ஊர்வலங்களும் நடைபெற்றுள்ளன. அமெரிக்கமக்களின் இந்த உணர்ச்சியை அதிபர் நிக்ஸன் அறிந்திருக்கிறர். அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு அவர் நடவடிக்கையும் எடுத்துவருகிறர். தனது கடமைகளை நினைத்தவுடனே நிறுத்திக் கொள்வதென்பது சுலபமல்ல 'முள்வேலியில் போட்ட சேலையை மெல்ல மெல்லத்தான் எடுக்கவேண்டும்' என்பது தமிழிலுள்ள ஒரு பழமொழி இந்தநிலையில்தான் அமெரிக்காவும் இருக்கிறது.

தென் வியட்னுமிலுள்ள தமது படைகளைப் படிப்படியாகத் திருப்பி அழைத்துக் கொள்வதுதான் தங்கள் கொள்கையென்பதை அமெரிக்கஅரசாங்கம் வெளிப்படையாகவே அறிவித்திருக்கிறது. இதைச் செயல்படுத்தும் முறையில் பதினுயிரம் துருப்புக்கள் அங்கிருந்து ஏற்கனவே திருப்பி அழைக்கப்பட்டுள்ளன. இது இன்னும் துரிதமாக நடைபெறவேண்டுமென்று அமெரிக்க மக்கள் விரும்புகிறார்கள். தென் வியட்னுமிலிருந்து அமெரிக்கத் துருப்புகள் விலக்கிக் கொள்ளப்படும்போது தென் வியட்னுமிலிருந்து வடவியட்னும் துருப்புக்களும் விலக்கிக்கொள்ளப்படவேண்டுமென்று அமெரிக்கா வற்புறுத்திவருகிறது தென் வியட்னும் சம்பந்தமாக ஜோன்சன் நிர்வாகம் பின்பற்றிய கொள்கையிலிருந்து நிக்ஸன் நிர்வாகம் விலகிச் சென்றுகொண்டிருக்கிறது. ஜோன்சன் நிர்வாகம் தென் வியட்னுமில் படைகளைக் கொண்டுபோய்க் குவித்துவந்தது அமெரிக்க மக்களின் விருப்பத்திற்கு மாறுகவே அது இதைச் செய்துவந்தது இப்போது துருப்புக்கள் திருப்பி அழைக்கப்படுவதைத் தளர்த்திவருகிறது. புதிதாகப்படைகள் அனுப்புவதை அது நிறுத்தியிருப்பதுடன் மாண்டுபோன துருப்புக்களுக்குப் பதிலாகப் புதிய துருப்புக்களை அனுப்புவதையும் அது நிறுத்தியிருக்கிறதாம். இதனுல் வியட்னுமில்சண்டை மந்தமடைந்து நிலைமை திருந்தி நல்ல சூழ்நிலைக்கு வழிகாட்டிவருகிறது. வியட்னும் சம்பந்தமாகப் பாரிசில் நடைபெற்றுவரும் பேச்சுக்களில் எதிர்பார்த்த அளவு முன்னேற்றம் காணப்படவில்லையாஞலும் வியட்னுமில் இன்று தோன்றிவரும் புதிய சூழ்நிலை பாரிஸ் பேச்சுவார்த்தைகளிலும் நல்லதொரு முன்னேற்றத்தை ஏற்படுத்துமென எதிர்பார்க்கலாம்.

தென் வியட்னுமிலிருந்து அமெரிக்கத் துருப்புக்கள் முற்றுக விலக்கப்பட்டதும் அந்த இடத்தை தென் வியட்னும் துருப்புக்கள் எடுத்துக் கொள்வதற்கு தென் வியட்னும் அரசு நடவடிக்கைகள் எடுத்துவருகிறது. திடுதிப்பென்று தென் வியட்னுமிலிருந்து அமெரிக்கா தனது துருப்புக்கள் முழுவதையும் விலக்கிக்கொண்டால், தன்னை நம்பிய தென் வியட்னுமியரை அமெரிக்கா அனுதரவாக விட்டுவிடுவதாகுமே யென்ற கவலை சில வட்டாரங்களில் நிலவுகிறது. இதில் நியாயமில்லாமலில்லை தென் வியட்னுமியர் அழைத்திருந்தாலும் அழைத்திருக்காவிட்டாலும் அமெரிக்கா தன்னை 'உலக இரட்சகராக' கருதி அங்கு சென்றிருக்கத் தேவையில்லை. அங்கு கால் வைத்தபின்னரும் வியட்னும் மக்கள் தங்கள் பிரச்னையைத் தாங்களே தீர்த்துக் கொள்ளக்கூடிய முறையில் வழிசெய்துவிட்டு விவேகத்துடன் வெளியேறியிருக்கலாம்

இப்போதும்கூட அமெரிக்க மக்களின் விருப்பத்துக்கிணங்க, வியட்னும் பிரச்னைக்கு வியட்னும் மக்களே தீர்வு காணக்கூடிய வழிவகைகளை வகுத்துக்கொடுக்கும் பொறுப்பை உலக அரங்காகிய ஐ. நா விடம் ஒப்படைத்துவிட்டு வெகு துரிதமாக

# மகாத்மாவின் புகழைவானளாவ பேசுவதால் கடமைமுடிந்துவிடுமா?

புங்குடுதீவில் அண்மையில் நடைபெற்ற காந்தி நூற்றுண்டு விழாவில் வண. பிதா பி. ஜே. ஸ்ரனிஸ்லொஸ் அவர்களும் கலந்துகொண்டு நிகழ்த்திய சொற்பொழிவின் ஒரு பகுதியிது.

வேத நெறி தழைத்தோங்கிய புண்ணிய பாரத பூமியிற் பிறந்து, மதப்பற்று மிக்க மாதாவினுல் வளர்க்கப்பட்டு, இந்திய மதப் பண்பாட்டின் மனதை முற்றுக ஏற்று விளங்கிய காந்தியடிகள் பிற மதங்கள் தமக்கு அளித்த நறுமணங்களையும் தாங்கி உலகுக்கு அருள் மணம் வீசி நின்ருர். 'வேறுபடு சமயமெல்லாம் புகுந்து நோக்கி விளங்கு பரம் பொருளின்' விளையாட்டே என்பதையுணர்ந்த சர்வ சமய சமரச ஞானக் காட்சியே அவரை மகாத்மா ஆக்கியது.

நம் நாட்டிலும் அயல் நாடுகளிலும் நாம் காண்பது என்ன? நம் உள்ளத்துள் குமுறுகின்ற "குருசேஷத்திரப்" போரைப் போன்றே நம் சின்னஞ் சிறு தீவிலும் நாகரிகம் மிக்க அயல் நாடுகளிலும் போர் மோகங்கள் குமுறுகின்றன. பொருமை, பகை, வெறுப்பு, இரத்தவெறி மிகுந்து, மனிதனை மனிதன் மிருகவேகத்துடன் சாடுகிருன். இத்தனை அக்கிரமமும் மதத்தின் பெயரால் நடைபெறுகின்றன. சைவனது கோவிலைப் பௌத்த குரு பிடிக்கிருன். புத்தவிக்கிரத்தை சைவன் உடைத்துக் கடலில் போடுகிருன். கத்தோலிக்கன் கட்டிய கோயிலைப் பௌத்தன் இடிக்கிருன். இஸ்லாமிய பள்ளிவாசலை யூதன் எரிக்கிருன். மத்திய கிழக்கில் மதத்தின் பெயரால் நிகழும் நாச வேலைகள் மூன்ரும் உலகப் போருக்கே வித்திடும் போலத் தெரிகிறது. அராபியரும் இஸ்ரவேலரும், ஒரு புனித பூமிக்காகப் புனிதப் போர் ஒன்றை நடத்துகிருர்கள் நம் கண் முன்னையே லண்டன் டரியில் கிறீஸ்தவரும் கிறீஸ்தவரும் பேய்வெறி கொண்டு ஊழிநடனம் புரிகின்றனர். எம்மான் காந்தி பிறந்த குஜராத் நாட்டில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவரையொருவர் கொன்று குவிக்கின்றனர். எந்த மதப் பூசலை ஒழிக்க எம் அண்ணலார் தம்

வர். எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர் எனச் செப்புகின்றன முத்தி நிலையில் 'தாடலைபோற்' கூடிய ஆன்மாக்கள் அந்த மொன்றிலா ஆனந்தத்தை அனுபவிக்கின்றன. பந்தநிலையில் ஆண்டவனது அருளாகிய பாற் சமுத்திரத்தில் அறியாமையுடன் கூடியவையாய் உலாவும் மீன்களாகிய ஆன்மாக்கள், தம் உள்ளும் புறமும் ஒழிவற நின்று தம்மைக் காக்கும், அவ்அருளாளனின் வயப்பட்டு, 'அவள்சித்தமே தம் செயலெனக்' கொண்டு வாழ்ந்தால், இத்துன்ப நிலையினின்றும் விடுபட்டு, இன்ப நிலை எய்தும் என்றே எல்லாச் சமயங்களும் போதிக்கின்றன. தம்மைத் தாங்கி நிற்கும்தயாநிதியை'அல்லா' என்று இஸ்லாமியரும், 'யாவே' என்று எபிரேயரும் 'பிதா' என்று கிறிஸ்தவர்களும், 'அரன்' என்றும், 'அரி' என்றும் சைவ, வைஷ்

"ஒன்றது பேரூர்; வழி
ஆறு அதற்குள
என்றதுபோல இரு முச்
சமயமும்"
"நன்றிது தீதிது என்று
உரையாளர்கள்
குன்று குரைத்து எழு
நாயை ஒப்பார்களே"
"இத்தவம் அத்த வம்
என்றிரு பேரிடும்
பித்தரைக் காணின் நகும்
எங்கள் பேர் நந்தி
எத்தவும் ஆகில் என்?
எங்கு பிறக்கில் என்?
ஒத்துணர் வார்க்கு ஒல்லை
ஊர் புகலாமே"

என்னும் அருங்கருத்துக்கள் காணப்படுகின்றன.

'யாதொரு தெய்வம் கொண்டீர் அத் தெய்வமாகி ஆங்கே மா தொரு பாகனுர் தாம் வருவர்" என்று "சிவ ஞான சித்தியார்" உரைக்கின்றது "ஓது சமயம்" என்ற அருஞ் செய்யுள் பிறமதங்களேன் உள என்பதை உய்துணர

ளினத்துக்கு அவை அருளிச் செய்யப்பட்டனவோ அவ்வவற்றுக்கு உரிமையுடையவர்களின் நோக்குடன் ஆராய்ந்ததால் அவையெல்லாம் அடிப்படையில் ஒன்றே என்றும ஒன்றுக்கு ஒன்று உபகாரமானவையே என்றும் உணர்வோம்"

காந்திமகான் ஒரு புனிதர் ஒருவன் புனிதன் என எப்படி அறிகின்ருேம்? அடியார்களில் ஒருவர் இறையருளால் அற்புதங்கள் செய்தால் அவர் புனிதரே என உலகத்தார் போற்றுவர் ஆனுல் உலகம் முழுவதும் ஒருவித அற்புதங்களும் செய்யாத காந்தியடிகளை மகாத்மா எனக் கொண்டாடுகிறது. அவர் அஹிம்சையை இறுதிவரை கடைப்பிடித்தார். தனி மனிதனின் வாழ்வுக்கும் சமுதாயத்தின் தேவைகளுக்கும் அதுவே ஏற்ற ஆயுதம் எனக்கொண்டார் அணுகுண்டு செய்யும் மனித சமுதாயம் பூரண அழிவுக்குட்படாமல் தப்ப அவரது அஹிம்சை எனும் ஆயுதமே உதவும் என்பதை உலக அறிஞர் எல்லாரும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

ஆர்ணல்ட் ரொயின்பீ கூறுகிருர்: "நான் வாழ்வில் கண்டமுடிவு இருபத்தோராம் நூற்ருண்டில் மதவாதம் ஒழிந்து மதஒருமைப்பாடு ஓங்கும். பலாத்காரம் என்ற ஆயுதத்தால் சமுதாயப் பிரச்னைகளுக்கு முடிவு கட்டமுயலாமல், அஹிம்சை என்ற ஆயுதத்தையே மனிதன் பயன்படுத்த முயல்வான்"

அழிவு என்ற கொடும் பாதாளத்தை நோக்கிக் கொண்டு, இனி ஓரடியும் முன்னே வைக்க இயலாது நிற்கும் மானிடனை "கதியுண்டு பயமில்லை" எனக் களிப்படையச்செய்த அண்

**- வண. பிதா பி. ஜே. ஸ்ரனிஸ்லொஸ் -**

ணவர்களும் அழைப்பினும், அனைவரும் குணதீதரான அப்பொருளுக்கு அளித்துள்ள குணங்கள் ஒரே தன்மையனவே. அதுவே பரம் பொருள்; அதுவே உண்மைப்பொருள்; அதுவே அறிவுப் பொருள்; அதுவே ஆனந்தப்பொருள், பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள், ஊழிதோறும் அழியாது ஆன்மாக்களுக்கு ஆதாரமாய்நின்று நிழல் தரும் பொருள் அனைத்துயிர்க்கும் அப்பனுயும், அம்மையாயும் திகழும் ஒரு தனிப் பொருளைப்போற்றும் குழந்தைகளாகிய மனிதர் தாம் க்கோதரரே எனக்கருதாது விடுவது ஏனே?

### வத்திக்கான் கருத்து

இது என்னுடைய சொந்தக்கருத்து மட்டுமன்று கத்தோலிக்கதிருச்சபையும் இக் கருத்தைக் கொண்டுள்ளது. ஒரிரு ஆண்டுகட்கு முன் 'வத்திக்கான் பொதுச் சபையில்' தீர்மானிக்கப்பட்ட ஒரு முக்கிய கருத்து இது பிறகிறிஸ்துவ மதங்களை மட்டுமின்றிப் பிறமதங்கள்

வைக்கின்றது. உண்மைச் சமயம் மற்றச் சமயங்களோடு சண்டையிடாது. இறைவன், இடம், காலம், நோக்கி ஒவ்வொரு இனத்தவருக்கும் உண்மையின் ஒவ்வொருபகுதிகளைவெளிப்படுத்தியுள்ளான் யானை தடவிய குருடர் போலச் சிறுமதியினர் பூசலிடுவர் அனுபூதிச் செல்வராகிய மாணிக்கவாசக சுவாமிகள்,

"சமயவாதிகள் தத்தம்
மதங்களில்
அமைவதாக அரற்றி
மலைந்தனர்"

எனவாய்வாத நோயாளரை எள்ளி நகையாடுகின்ருர் சமீப காலத்தில் வாழ்ந்த தாயுமானவரும் "வேறுபடும் சமயமெல்லாம் புகுந்து பார்க்கில் விளங்கு பரம் பொருளே நின் விளையாட்டு அலலால் மாறு படும் கருத்தில்லை"

எனப்பாடுகிருர் எனவே காந்தியடிகள் கண்ட சர்வ சமய சமரசம் பாரதப் பண்பாட்டில் நன்கு வேரூன்றிய தத்துவமே என்பதில் ஐயமில்லை அடிகளது வார்க்கு

## முன்னேறுவதாகச் சொல்லும்நாம் பின்னேக்கியல்லவா போகிறேம்!

னலுக்கு மகாத்மா என்ற பட்டம் போதாது என்று 'அமரர்' என்றும் "மாந்தருள் ஒரு தெய்வம்" என்றும் மானிட சமுதாயம் துதிக்கின்றது. ஹிந்துக்களுக்குள் உயர்ந்த ஹிந்துவாயும், கிறிஸ்தவருள் உயர்ந்த

# நாட்டிலும் நகரிலும்

வடமராட்சி பகுதியில் ஒவென்று திறந்த வெளியாக கிடக்கும் சுமார் 15000 ஏக்கர் தரிசான சவர் நிலத்தை நன்னிலமாக்குவதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கும்படி வடமராட்சி பயிர்ச்செய்கைக் குழு அடுத்த மாதம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்யப்போகும் பிரதமருக்கு மகஜர் சமர்ப்பிக்கப் போகிறது.

வடமராட்சி கடலேரித் திட்டம் என்ற திட்டத்தை இன்று நேற்றல்ல, 1930-ம் ஆண்டுகளிலேயே அப்பொழுது சட்டசபையில் பருத்தித்துறைப் பிரதிநிதியாக இருந்த திரு. கே. பாலசிங்கம் விபரமாக எடுத்துக் காட்டி அதன் பெரும் நன்மைகளை விளக்கியுள்ளார். அதன்பின் மின்னேரித் திட்டம், கல்ஓயாத் திட்டம் என்று பல திட்டங்கள் நிறைவேறியுள்ளபோதிலும் இந்த திட்டம்மட்டும் முடிந்தும் முடியாமலும் அரைகுறையாக நிற்கிறது.

வடமாகாணத்திலுள்ள ஒரே ஒரு பெரும் நதியாக கனகராயன் ஆறு மாரி காலத்தில் பெருக்கெடுத்து இரணைமடுக் குளத்தை நிரப்பிய பின் எஞ்சியநன்னீரைக் கொண்டுவந்து ஆனையிறவு ஏரிக்குள் கொட்டுகிறது. நெத்தலி ஆறு, தேராவில் ஆறு முதலிய சிற்ருறுகளின் தண்ணீரும்இதற்குள்ளேயே விழுகின்றது.

இந்த நீர் யாவும் கடலுக்குள் போய்ச் சேராமல் சேகரிக்கப்பட்டு விவசாயத்துக்கு உதவவேண்டும் என்பதே வடமராட்சி கடலேரி திட்டம்.

இக்கடலேரியானது யாழ்ப்பாணக் குடாநாட்டையே இரு பிளவாக பிளந்து பச்சிலைப்பள்ளியிலுள்ள முள்ளியன் தொடக்கம் செம்பியன்பற்று. எழுதுமட்டுவாள், வரணி, கரவெட்டி, வல்லை ஆகிய கிராமங்களைக் கடந்து தொண்டமானுற்றில் கடலோடு கலக்கிறது.

தொண்டைமானுற்றில் இப்பொழுது 600 அடி நீளமுள்ள தடைவரம்புஅமைக்கப்பட்டதன் விளைவாக அந்தப் பக்கத்தால் கடல் நீர் ஏரிக்கு வருவதுமில்லை, ஏரி நீர்கடலுக்குள் விழுவதுமில்லை

ஆனையிறவிலும் அவ்விதமே ஓர் அணை அமைக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும் இந்தப் பரந்த பிரதேசத்தை நல்லமுறையில் உபயோகிக்க இன்னும் வாய்ப்பு ஏற்படவில்லை. சிற்சில இடங்களில் கடல்நீர் இன்னமும் வரத்தான்செய்கிறது. ஏற்கனவே பலவருடங்களாக கடல்நீருடன் கலந்து வந்தபடியால் அடிமண்ணில் இன்னும் உவர்த்தன்மை இருந்துகொண்டே வருகிறது. மேற்சொன்ன ஆற்றுநீர் வந்து நிரம்பியதும் கோடை காலத்தில் எறிக்கும் கொடிய வெய்யில் வெகு சீக்கிரத்தில் அதை வற்றச் செய்துவிடுகிறது. இப்பொழுது பார்த்தாலும் கண்ணுக்கும் எட்டாத தூரம்வரை ஆடுமாடுகள்கூட மேயாதபடி புல்லுமில்லாத பெரும் வெளி மைல் கணக்காகப் போகிறது.

செப்பமான அணைக்கட்டுகள்போட்டுவிட்டால் நிலத்தில் சொற்பமான உப்புத்தன்மை இருந்தாலும்கூட வேளாண்மை செய்யும் வசதி ஏற்படும்.

உவர்நிலத்திலும் விளையக்கூடிய பயிரினங்கள் பல உண்டு. பெரிய வெள்ளை என்ற நெல்லுக்கு உவரை எதிர்க்கும் சக்தி உண்டு. இதை விட நாலரை மாதங்களில் விளையும் சவர்க்கூரன் உவர்கறுப்பன், உவர் வெள்ளை என்ற இனங்களுமுண்டு.

முற்றிலும் கடலேரி சூழ்ந்த எருமைதீவில் (மட்டக்களப்பில்) உவர்க்கறுப்பன் அமோகமான விளைச்சலைக் கொடுக்கிறது.

சுதுவீ, சுரமணியன் என்ற இனங்கள் காலி, மாத்தறை பகுதியிலுள்ள உவர்நிலங்களில் விளைகின்றன.

வடமராட்சி திட்டம் பூர்த்தியானலன்றி எதுவும் செய்யமுடியாது பிரதம மந்திரி இம்முறையாவது இதற்கு ஒரு முடிவுகாணக் கூடியநடவடிக்கைகளைஎடுப்பாரென்று வடமராட்சி மக்கள் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிருர்கள்!

— வழிப்போக்கன்

## 'பொருத்தமான இடம் இல்லை; அதனுல்இடமாற்றமும் இல்லை'

### யாழ். மாநகர நிதிக் குழு முடிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் ஏரிக்கு வருவதுமில்லை, —வழிப்போக்கன்

நிக்ஸன் நிர்வாகம் விலகிச் சென்றுகொண்டிருக்கிறது. ஜோன்சன் நிர்வாகம் தென் வியட்நாமில் படைகளைக் கொண்டுபோய்க் குவித்துவந்தது அமெரிக்க மக்களின் விருப்பத்திற்கு மாறாகவே அது இதைச் செய்துவந்தது இப்போது துருப்புக்கள் திருப்பி அழைக்கப்படுவதைத் தொடர்ந்து வட வியட்நாமும் தனது சில நடவடிக்கைகளை டன் வெளியேறியிருக்கலாம்

இப்போதும்கூட அமெரிக்க மக்களின் விருப்பத்துக்கிணங்க, வியட்நாம் பிரச்னைக்கு வியட்நாம் மக்களே தீர்வு காணக்கூடிய வழிவகைகளை வகுத்துக்கொடுக்கும் பொறுப்பை உலக அரங்காகிய ஐ. நா விடம் ஒப்படைத்துவிட்டு வெகு துரிதமாக அமெரிக்கா ஏன்வெளியேறககூடாது.

## 'இவ்வருட முடிவுக்குள் இராமநாதன் பல்கலைக்கழகம்'

### தமிழ் காங்கிரஸ் கிளை கோரிக்கை

கொழும்பு, வியாழன்

1963ஆம் ஆண்டுதொடக்கம் ஒவ்வொரு ஆண்டும் இராமநாதன் பல்கலைக் கழகம் ஏற்படுத்துவதற்கென ஒவ்வொரு ஆண்டின் வரவு செலவுத் திட்டத்திலும் அடையாள மானியம் ஒதுக்கப்பட்டு வந்தபோதிலும் தேசிய அரசாங்கம் மிதமிஞ்சிய தாமதம் செய்வதையிட்டு இக்குழுமட்டில்லாத் துக்கம் கொண்டுள்ளது. தேசிய அரசாங்கத்திடம் இப் பல்கலைக்கழகத்தை இவ்வாண்டு முடியுமுன் ஏற்படுத்தும்படி இக்குழு கேட்டுக்கொள்கின்றது; இப் பல்கலைக்கழகத்தை ஏற்படுத்துவதன் மூலம் தேசிய ஐக்கியத்தைமேம்படுத்தவும் தமிழ் பேசும் மக்கள் தேசிய அரசாங்கத்தின் மேற்கொண்டுள்ள நம்பிக்கை அழியாதிருக்கவும் தகுதிவாய்ந்த எல்லாத் தமிழ்ப்பேசும் மாணவர்களுக்கு உயர் கல்வி பயில்வதற்கு வாய்ப்பு அளிக்கப்படுமென்றும் இக்குழு கருதுகிறது.

இவ்வாறு கோரும் தீர்மானம் தமிழ்காங்கிரஸ் கொழும்புக் கிளையினால் நிறைவேற்றப் பட்டுள்ளது. அண்மையில் கிளைத் தலைவர் திரு. சு. சரவணமுத்து தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்ற தீர்மானம் வருமாறு:

இன்றையதேர்தல்அமைப்பில் சிறுபான்மைத் தமிழர் தமது சமூகத்திற்கு பிரதிநிதித்துவம் பெற முடியாதிருப்பதைமனதிற்கொண்டு இச் சமூகத்தினரிடையிலிருந்து மேற்சபைக்கும் ஆட்சிமன்றத்திற்கும் அங்கத்தினர்கள் நியமிக்கப்பட வேண்டுமென இக்குழுஅபிப்பிராயம் கொண்டுள்ளது. ஆதலின் மேற்சபையில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது சிறுபான்மைத் தமிழர்ஒருவரை இவற்றுள் ஒன்றுக்கு நியமிக்கும்படி அல்லது தெரிவு செய்வதற்கு வழிசெய்யும்படி இக்குழு பிரதமரைக் கேட்டுக்கொள்கின்றது.

### மக்கள்......

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

தலைவராக திரு. ஐ. தனம் செயனும், செயலாளராக திரு. க. நவரத்தினமும், பொருளாளராக திரு. இ. மார்க்கண்டுவும் தெரிவு செய்யப்பட்டதுடன், 9பேர் கொண்ட ஒரு நிர்வாகசபைக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது

WANTED

"Wanted a Departmental Manager. Knowledge of Agro-Chemicals essential. Apply with recent testimonials. to Autos Ltd., Jaffna." 1481

### உடனடிவீடு கட்ட வசதி

கோட்டை, புதன்

பட்டின நகர, கிராம சபைகளுக்கு 10 லட்சம் ரூபா உடனடி வீட்டுவசதிகளைச் செய்து கொடுப்பதற்கு உள்ளூராட்சி அமைச்சு உதவி வழங்கவிருக்கிறது. வீடுகள் இரு நாட்களில் கட்டிக் கொடுக்கப் படும்.

உள்ளூராட்சி மன்ற பகுதிகளில் அம்மன்றங்களால் வீடுகள் கட்டுவதில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்க்கவே உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா மேற்படி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

அறிவித்தல்

சிறீமுருகன் ஸ்ரோர்ஸ், 6-புதிய பஸ் நிலையம், வவுனியா என்னும் விலாசதாரரிடமிருந்து எமது 'ஈழநாடு' பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை எமது வவுனியாப்பகுதி வாசக நேயர்கட்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம். 1795

டன் டரியில் கிறீஸ்தவரும் கிறீஸ்தவரும் பேய்வெறிகொண்டு ஊழிநடனம் புரிகின்றனர். எம்மான் காந்தி பிறந்த குஜராத் நாட்டில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவரையொருவர் கொன்று குவிக்கின்றனர். எந்த மதப் பூசலை ஒழிக்க எம் அண்ணலார் தம் உயிரை நீத்தாரோ, அப் பூசலே மீண்டும் அவர் பிறப்பால் புனிதமடைந்த குஜராத்தை மாசுபடுத்துகின்றது.

எம் சின்னஞ்சிறுதீவில் ஒரு கூரையின் கீழ் ஒன்றுபட்டு வாழும் ஒட்டுக் குடும்பம் போல் உறவு கொள்ள வேண்டி நாம் எவ்வாறு வேற்றுமைகளை வளர்க்கின்றோம்? கொந்தளிக்கும் இந்தச் சூழ்நிலையில் நாம் மகாத்மா காந்தியின் ஞானக் காட்சியையும் உன்னத இலட்சியத்தையும் வானளாவப் புகழ்ந்து பேசிவிட்டு, நாம் அப் பெரியாருக்கு செய்ய வேண்டிய கடனைச் செய்துவிட்டோம் எனத் திருப்தியுடன் பழைய வாழ்க்கைக்குத் திரும்புவது சரியா? அன்றேல் நாம் அன்னாரது அரிய உபதேசங்களை மனதில் வைத்து, நம் வாழ்வில் கடைப்பிடித்து, அவர் துன்பத்துடன் நடந்து சென்ற மணற் பாதையில் அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கப் போகின்றோமா? 'முன்னேறுகிறோம், முன்னேறுகிறோம்' எனப் பேசும் நாம் 11-ம், 17-ம் நூற்றுண்டுகளில் சிலுவைப் போர்களும், முப்பதாண்டுப் போர்களும் நடந்த காலத்துக்குப் பின்னோக்கிப் போய் படுகுழியில் விழுவதா?

மகாத்மா ஒரு பூரணமான ஹிந்துவாக வாழ்ந்தார். ஆகவே 'பேர் கொண்ட' கிறிஸ்தவ சமயிகள் பலரிலும் நல்ல கிறிஸ்தவராகத்திகழ்ந்தார் இந்துக்களுள் தலைசிறந்த இந்துவாயும், பௌத்தர்களுள் பண்பட்ட பௌத்தராயும் இஸ்லாமியருள் சிரிய இஸ்லாமியராயும் மதிக்கப்பட்டார். அவரது சமயானுபவம்' எல்லா மதங்களிலும் மேம்பட்டு விளங்கியது. அவர் கண்ட வாழ்க்கைத் தத்துவத்தின் இரு கண்கள் அகிம்சையும் சத்தியமுமே தொடக்க காலத்தில் 'ஆண்டவன் உண்மை வடிவானவர்' எனக் கூறி வந்த காந்தியடிகள் காலம் செல்லச் செல்ல, சமயானுபவம் முதிர்ந்த பின்னுளில் உண்மையே கடவுள் எனக் கூறத்தொடங்கினர்.

'கடவுள் ஒருவர் இருக்கிறார்' என நம்பும் மதங்கள் எல்லாம், அவர் காணப்பட்ட உலகனைத்தையும் படைத்துக்காத்து, அழிக்கிறார் அவர் எங்கும் இருப்ப

தோலிக்கதிருச்சபையும் இக் கருத்தைக் கொண்டுள்ளது. ஓரிரு ஆண்டுகட்கு முன் 'வத்திக்கான் பொதுச் சபையில்' தீர்மானிக்கப்பட்ட ஒரு முக்கிய கருத்து இது பிறகிறிஸ்துவ மதங்களை மட்டுமின்றிப் பிறமதங்கள் அனைத்தையும் ஒருமைப்பாடு அடையச் செய்யும் முயற்சியில் ஊக்கமுடன் உழைக்கத் திருச்சபை முன் வந்துள்ளது. ஒரு கடவுளை நம்பும் மதங்கள் எல்லாம் இணையவேண்டும் என்பதே நமது சமீபகாலக்கொள்கை.

இதுவே மகாத்மாவின் வாழ்வில் இழைந்து ஓடிய தனிப்பெருஞ் சிந்தனை. இதுவே அவர் வெவ்வேறு பெயர்கொண்ட மதத்தவரையும் இனத்தவரையும் ஒன்றுகக்கண்டு சேவைபுரியத்தூண்டியது.

### உண்மையை மறக்கின்றனர்

மகாத்மாகாந்தி மேனாட்டிற்கல்விகற்றவர் கிறிஸ்தவ மேற்கின்சிந்தனைகளில் ஊறியவர் எனச் சனாதன ஹிந்துக்கள் (பழைமை விரும்பிகள்) பேசினர். இன்றும் நம் யாழ்ப்பாணத்திற் கூறி வருகின்றனர். அவரைச் சுட்ட கோடசேக்கு முதலில் கோவில் கட்டவேண்டும் என்று சொன்ன ஆங்கிலஆசிரியர் ஒருவரையும் நான் அறிவேன். ஆனால் தம்ஹிந்து மதமே மெய்யான மதம், பிறமதமனைத்தும் மிலேச்ச மதங்கள் எனநினைப்பவர்கள் ஒரு பேருண்மையை மறந்துவிடுகின்றனர் பலசமயங்கள் பிறந்து வளர்ந்த பாரத பூமியில், ரிஷிகள் பழம்பெரும் நூலாகிய இருக்கு வேதத்தில்''ஏகம் சத்: விப்ராஹ பஹூ தாவதந்தி''

''உள்பொருள் ஒன்றே; மேலோர் அதனைப் பற்றி வெவ்வேறு விதமாகப் பேசுவர்'' என்ற கருத்தைத் தந்துள்ளனர்.

''விண்ணினின்றும் இறங்கும் நீர் எவ்வாறு சமுத்திரத்தை அடைகின்றதோ அவ்வாறே எந்தத் தெய்வத்தை வணங்கினாலும் அவ்வணக்கமெல்லாம் பரம்பொருளையே சாரும் என்கிறது ஒரு பழைய சுலோகம்.

''எல்லா நதிகட்கும் கடலே முடிவிடமாவது போல, நீயே எல்லா மக்கட்கும் இறுதியில் அடையத்தக்க பொருளாயிருக்கிறாய்'' என்று ''சிவமகிம்நாஸ்தோத்திரம்'' வைதிக சாங்கிய யோக, சைவ, வைஷ்ணவ மதங்களைக் குறிப்பிட்டுப் பேசுகின்றது.

திருமூலர் ''திருமந்திரத்தில்''

அலலால் மாறுபடும் கருத்தில்லை''

எனப்பாடுகிறார் எனவே காந்தியடிகள் கண்ட சர்வ சமய சமரசம் பாரதப் பண்பாண்டில் நன்கு வேரூன்றிய தத்துவமே என்பதில் ஐயமில்லை அடிகளது வாக்கு இது

### அடிப்படை உண்மை

''உலகப் பெருமதங்கள் எல்லாவற்றிலும் உள்ள அடிப்படை உண்மையை நம்புபவன் யான் அவையனைத்தும் கடவுள் அருளியவையே எந்த எந்த மக்களுக்கு மகாத்மா என்ற பட்டம் போதாது என்று 'அமரர்' என்றும் ''மாந்தருள் ஒரு தெய்வம்'' என்றும் மானிட சமுதாயம் துதிக்கின்றது. ஹிந்துக்களுக்குள் உயர்ந்த ஹிந்துவாயும், கிறிஸ்தவருள் உயர்ந்த கிறிஸ்தவராயும், முஸ்லிம்களுள் உயர்ந்த முஸ்லிமாயும், பௌத்தருள் சிறந்த பௌத்தராயும் வாழ்ந்து அவர்காட்டிய நெறி, சமயம் கடந்த நெறி, சமயாதிதப் பழம்பொருளிடத்து எம்மை உய்க்கும் நெறி, அந்நெறியிற்சென்று நாம் அனைவரும் அமைதியுறல்வேண்டும்

திருநெல்வேலி

## செங்குந்த இந்துக் கல்லூரியின் 35 வருட வளர்ச்சி

[திருநெல்வேலி செங்குந்த இந்துககல்லூரியின் புதிய மேல் மாடிக் கட்டடத் திறப்புவிழா வைபவம் இன்று மாலை நடைபெறுகின்றது. இதனை முன்னிட்டு கல்லூரி மேல் வகுப்பு அதிகார மாணவியான செல்வி சந்திராதேவி சின்னத்துரை எழுதிய கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.]

திருநெல்வேலி கிழக்கில் இருக்கும் செங்குந்த இந்துக்கல்லூரி தனது 35 வயதில் இன்று மேல் மாடிக் கட்டிடம் ஒன்றைக் காண்கின்றது. ஒரு இனத்தின் பெயருடன் இக் கல்லூரி இயங்குகின்றபோதிலும் சுமார் நான்கு மைல் சுற்றளவிலுள்ள மக்களுக்கு இக்கல்லூரியே மிக முக்கியமான ஒரு கல்லூரியாக இருந்து வருகின்றது.

1934-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ந் திகதியன்று இக்கல்லூரி கட்டப்பட்டது. அன்றைய தினமே விஜயதசமியாகும். ஆரம்பத்தில் துயிபாச பாடசாலை என இது அழைக்கப்பட்டது.

கடந்த 35 ஆண்டுகளாக பரம்பரை பரம்பரையாகவே பலகுடும்பங்களுக்கு கல்வி அறிவு புகட்டிய ஒரு நிலையமாக இது விளங்குகின்றது. நல்லூர் தேர்தல் தொகுதியில் இருக்கும் இக் கல்லூரி திருநெல்வேலி, கல்வியங்காடு, நல்லூர், இருபாலை, கட்டைப்பிராய், நாயன்மார்கட்டு, செம்மணி, அரியலை ஆகிய இடங்களில் வசிக்கும் மக்களுக்கு ஒரு தலை சிறந்த கல்லூரியாக விளங்கிவருகின்றது.

கல்வியங்காட்டுச் சந்தைக் கருகாமையில் சுமார் 15 பரப்புக் காணியில் இக் கல்லூரி இருக்கின்றது. இதற்கான காணியை இளையதம்பி சாஸ்திரியார் (வடையப்பா) என்பவர் கல்லூரிக்காக இலவசமாக வழங்கினார். முன்னர் இக்காணி சங்க மடம் என அழைக்கப்பட்டது.

இப்பாடசாலையை சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தினர் நடத்தி வந்தனர். இதன் முகாமையாளராக 'இந்து போர்ட்' இராஜரத்தினம் கடமையாற்றி செவ்வனே நடத்தி வந்தார். அப்போது இங்கு முதலாம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரையுமே இருந்தது. சுன்னாகம் குமாரசாமிப் புலவரின் மகனை முத்துக்குமாரசாமிப்பிள்ளையே இதன் முதல் தலைமை ஆசிரியராவார்.

10 வருடங்களின் பின் 1944-ம் ஆண்டில் மூளாயைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. நா. கணபதிப்பிள்ளை இதன் அதிபராகப் பதவி ஏற்றார். அதன் பின்னர் இங்கு எஸ். எஸ். சி. வகுப்புகள் வரை கல்வி கற்பிக்கப்பட்டது. 1947-ம் ஆண்டிலே இப்பாடசாலை செங்குந்த இந்து ஆங்கிலப் பாடசாலை எனப் பெயர் மாற்றப்பட்டதோடு, இங்கு விஞ்ஞானக்கல்வியும் கற்பிக்கப்பட்டு விஞ்ஞான ஆய்வு கூடம் ஒன்றும் நிறுவப்பட்டது

1960-ம் ஆண்டு இங்கு ஜி எ் ஈ உயர்தர வகுப்பும் நிறுவப்பட்டது 1961-ம் ஆண்டு அரசாங்கம் பாடசாலைகளைச் சுவீகரித்ததோடு கல்லூரியும் தரம் உயர்த்தப்பட்டு செங்குந்த இந்துக் கல்லூரி என்று பெயர் மாற்றப்பட்டது 1967-ம் ஆண்டு வரை திரு கணபதிப்பிள்ளை அவர்கள் அதிபராகவிருந்த 24 வருட காலமே இக்கல்லூரியின் முக்கிய கால கட்டமாகும் இக்காலத்திலேயே கல்லூரி நாடக மன்றம், விளையாட்டுக்கழகம், இலக்கியமன்றம், மாணவர் தேர்ச்சிச் சங்கம், சைவ வளர்ச்சிக்கழகம் ஆகியன நிறுவப்பட்டதோடு கல்லூரி வருடாந்த சஞ்சிகையான சுடரொளியும் வெளியிட ஆரம்பிக்கப்பட்டது

கல்லூரியின் வளர்ச்சிக்காக அயராது உழைத்த அதிபர் திரு கணபதிப்பிள்ளை இளைப்பாறியதைத் தொடர்ந்து இவ்வருட முற்பகுதியில் அகாலமரணமானார் இதன் பின்னரே தற்போதைய அதிபரான திரு எஸ் பி நடராஜா இங்கு வருகை தந்தார்

முன்னர் ஆரம்பித்து வைத்த மேல்மாடி கட்டிட வேலையை பின்னவர் தனது காலத்தில் செய்து முடித்துள்ளார் ஓராண்டுக்குள் இவர் செய்த அரும்பெரும் சேவை இதுவாகும்

52 ஆசிரியர்களுடன் சுமார் 1300 மாணவர்கள் கல்வி கற்கும் இக்கல்லூரி நல்லூர் தொகுதியில் முதன்மை பெற்று விளங்குவதோடு யாழ்ப்பாண மாவட்டத்திலும் கல்வி, ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகியவற்றில் நற்பெயருடன் விளங்குகின்றது

## 'பொருத்தமான இடம் இல்லை; அதனால் இடமாற்றமும் இல்லை'

### யாழ். மாநகர நிதிக் குழு முடிவு

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் நல்லூர் வைமன் வீதியிலுள்ள மின்சார இணைப்பு 'ருன்ஸ் போமர்' அங்கிருந்து இடம் மாற்றம் செய்யப்படமாட்டாது.

இந்த 'ருன்ஸ் போமரில்' அடிக்கடி நெருப்புப்பற்றுவதால், அப்பகுதி மக்கள் தினமும் அபாயத்தை எதிர்பார்த்து வாழவேண்டிய நிலையிலுள்ளதாக இப்பகுதி மக்கள் செய்துகொண்ட புகாரைத் தொடர்ந்தே இதை இடம்மாற்றுவது பற்றி ஆலோசிக்கப்பட்டது.

'ருன்ஸ்போமரை' இடம் மாற்றுவதற்கு அந்தச் சுற்றுடலில் தகுந்த இடம் இல்லாததால் தற்போதைக்குஇந்த விஷயத்தைக்கைவிடுவதென மாநகரசபை நிதிக்குழு முடிசெய்தது.

இத்தீர்மானத்தைஆட்சேபித்து வைமன்வீதி மக்கள் 'ருன்ஸ் போமரை' இங்கிருந்து உடடினயாகமாற்ற வேண்டுமென மாநகர ஆணையாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் கடற்கரை வீதியிலிருக்கும் சைவ இடுகாடு நிலத்திலுள்ள விளைபொருட்களை 1970-ம்ஆண்டு முதல் குத்தகைக்குக் கொடுக்க கேள்வி விண்ணப்பம் கோருவதென்றும் நிதிக்குழு முடிவுசெய்தது.

(கா. நி.

## இ.தி.மு.க.வை, கண்காணிக்கும்

கோட்டை, வியாழன்

பொலிஸ் குற்றத்தடுப்பு பகுதியின் விசேஷக்கிளை நுவெரெலியா, இரத்தினபுரி பண்டாரவளைப் பகுதிகளில் தி.மு.கவின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கு மூன்று கிளைகள் நிறுவவுள்ளது

இக்கிளைகள் உதவிபொலிஸ் சுப்பிரின்டன் ஒருவரின் கீழ் இயங்கும். இவற்றுக்கும் உள்ளூர் பொலிசாருக்கும் நவம்பரிலிருந்து தொடர்பிராது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org